விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 01 வியாழக்கிழமை (16.06.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 179

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 'இலங்கையின் கொலைக்களம்'

# ஆவணப் படம் வெளியிடப்பட்டது

## உலகெங்கும் அதிர்ச்சி அலை

(லண்டன்)

சனல் 4 இன் 'இலங்கையின் கொலைக்களம்' எனும் ஆவணப்படம் வெளியிடப்பட்டது.நேற்றுமுன்தினம் வெளியான இவ் ஆவணப் படம் உலகெங்கும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதில் வன்னி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களை உறுதிப்படுத்தும் பல காட்சிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிர்ச்சியில் பிரி.அமைச்சர்

(லண்டன்)

சனல் 4 வெளியிட்ட 'கொலைக்களம்' திரைப்படத்தைப்பார்த்த பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அதிர்ச்சியடைந்துள்ளார்.

இந்தக் காணொளி என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது என்கிறார் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலஸ்னரர் யர்ட் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டதற்கான வலுவான ஆதாரங்களை இவ் ஆவணப்படம் முன்வைத்துள்ளது.

இந்த போர்க்குற்றங்கள் குறித்து நடவடிக்கை எடுக்கும்படி இலங்கை தூண்டுவதற்கு (20ஆம் பக்கம் பார்க்க)

### சனல் 4 வீடியோவின் எதிரொலி

## விசாரணைக்கு வலியுறுத்தினார் பிரித்தானிய பிரதமர் கமரூன்!



(லண்டன்)

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கேள்வி நேரத்தின்போது சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப்படம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து கொன்சவேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லீ ஸ்கொட், பிரதமர் டேவிட் கமரூனிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இக் கேள்விக்கும் பதிலளித்த பிரதமர் டேவிட் கமரூன் இப் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமானதும் காத்திரமானது (20ஆம் பக்கம் பார்க்க)

## சம்பிக்க ரணவக்க – விமல் வீரவன்ச ஜனாதிபதியுடன் இரகசிய சந்திப்பு

(கொழும்பு)

13ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் காவல் துறை அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட சிரேஷ்ட உறுப்பினர்களுடன் இணக்கத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும் அமைச்சர் களான சம்பிக்க ரணவக்க மற்றும் விமல் வீரவன்ச ஆகியோரின் அழுத்தங்கள் காரணமாக தனது தீர்மானத்தை மாற்றிக் கொண்டதாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய பேச்சுவார்த்தைகள் இறுதியானதாக அமையவேண்டும்

### இரா.சம்பந்தன் வேண்டுகோள்

(புதுடில்லி)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் முன்னர் பல தடவைகள் நடத்தியிருந்தது. ஆனால் தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இறுதியானதாக அமைய வேண்டும் என்பதை எமது எதிர்பார்ப்பாகவும் வேண்டுதலாகவும் உள்ளது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளேடான இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகையின் கொழும்பு நிருபருக்கு அளித்த செவ்வியிலேயே (20ஆம் பக்கம் பார்க்க)

## புலி ஆதரவாளர்களின் நிதியில் உருவான சனல் 4 வீடியோ

### இலங்கை அரசாங்கம் விளக்கம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தையும் இராணுவத்தையும் பிரச்சினைக்குள் சிக்க வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள புலம் பெயர் புலி ஆதரவாளர்கள் மீண்டுமொரு முறை சனல் 4 தொலைக்காட்சியினை ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளனர்என்றுபாதுகாப்புச்செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யுத்தகாலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் சில சம்பவங்களை மேற்கோள்காட்டி மேற்படி சனல் 4 தொலைக்காட்சி போலி வீடியோ ஆவணமொன்றினை தயாரித்துள்ளது.

இந்த நடவடிக்கை விடுதலைப்புலி ஆதரவாளர்களின் கூற்றுக்கிணங்க அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பணத்தைக் கொண்டு தீட்டப்பட்ட சதித்திட்டமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தகாலத்தின் எல்லா சந்தர்ப்பங்களிலும் பொது மக்களை காப்பாற்றி அவர்களுக்கு பாதுகாப்பளித்து வந்த இராணுவத்தினர் ஒருபோதும் அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. (20ஆம் பக்கம் பார்க்க)

## விடுவிக்கப்பட்ட மீனவர்கள் நாடு திரும்பினர்

(சென்னை)

இந்தியாவின் தமிழ் நாட்டிலும் மனிகோய் தீவிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 40 மீனவர்களும் இந்திய அதிகாரிகளால்விடுவிக்கப்பட்டதைத்தொடர்ந்து அவர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

41 மீனவர்களையும் 7 மீன்பிடிப்படகுகளையும் இந்திய அதிகாரிகள் விடுவிப்பதாக இருந்தது. இலங்கையைச் சேர்ந்த இந்த மீனவர்கள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது இந்திய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தனர். விடுவிக்கப்பட்டிருக்கும் இந்த மீனவர்கள் இந்த வாரம் யாழ்ப்பாணத்தினை வந்தடைவார்கள். (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


## எரிபொருள் விற்பனை நிலையத்தை திறக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியில் விசுவமடு விவசாயிகளின் பலநோக்குக் கூட்டறவுச் சங்கத்தின் நிதியுதவியுடன் 1 1/4 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையம் இன்னும் திறக்கப்படவில்லை.

நீண்ட காலமாக மேற் குறித்த பிரதேசத்தில் எரிபொருள் விற்பனை நிலையம் இல்லாதிருந்தபோதிலும் தற்போது நிர்மாணிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையத்தின் ஊடாக தமது தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளதாக அப் பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர். எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3)


**வர்த்தகப் பெருமக்களே...**

பெருமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)


## இலங்கையர் மீது நமீபியாவில் 1516 கிரிமினல் குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

நமீபியாவில் 2007ஆம் ஆண்டு மோசடியான வகையில் வங்கி அட்டைகளைத் தயாரித்த இலங்கையர் ஒருவர் மீது ஆயிரத்து 516 கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

24 வயதான அந்தனி சுரேஷ் குமார் ஸ்டானிஸ் எனும் இந் நபர் மீண்டும் பிணை அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். அவர் மீதான வழக்கு வின்தோக் நகரிலுள்ள மேல் நீதிமன்றத்தில் டிசெம்பர் 1 ஆம் திகதியிலிருந்து தொடரவுள்ளது.

2007 செப்டெம்பர் 26ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர் இன்னும் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

ஸ்டானிஸ் மீதும் அவரது சகாக்கள் ஐவர் மீதும் இக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர்கள் போலியாக வங்கி அட்டைகளைத் தயாரித்து நமீபிய வங்கிகளின் தன்னியக்க பணம் வழங்கல் இயந்திரங்கள் மூலம் பணம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் மோசடியாக பெற்ற பணத்தின் அளவு ஆயிரத்து 467 நமீபிய டொலர்களாகும் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் தம்மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து வருகின்றனர்.

இவ் வழக்கின் மற்றொரு சந்தேக நபரான இலங்கையைச் சேர்ந்த அமிர்தலிங்கம் புகழேந்தி என்பவர் 2008 டிசெம்பர் மாதம் 2இலட்சம் நமீபிய டொலர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். ஆனால் இறுதியாக கடந்தவருடம் பெப்ரவரி 20ஆம் திகதி பொலிஸில் ஆஜரான இவர் நமீபியாவை விட்டு தப்பிச் சென்று விட்டதாக நமீபிய பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது. (எ-1)

## கல்விச் சமூகத்தின் ஏற்பாட்டில் சிறப்புற நடந்த மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகத்தின் மணிவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமிமண்டபத்தில்மணிவிழாக் குழுவின் தலைவர் வீ. கணேசராசா தலைமையில் சைவ சமயக் குருமார்களின் ஆசியுரையுடன் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், வாழ்நாட் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, வடக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸ், யாழ். கல்விவலய பதில் கல்விப் பணிப்பாளர் போ. ரவீந்திரன், நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா, யாழ்ப்பாண கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன், கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் உட்பட பலரும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். அதிபர்கள், ஆசிரியர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் இணைந்து நடத்திய இம் மணி விழாவில் பெருந்திரளான கல்வியாளர்கள் கலந்துகொண்டனர். (ந)

## மக்களின் விபரத்தை கணனி மயப்படுத்தும் நடவடிக்கையே யாழில் முன்னெடுப்பு

### பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தொடர்பான விபரங்களை கணனி மயப்படுத்தும் நடவடிக்கை ஒன்று பொலிஸாரால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ஏனைய பிரதேசங்களில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டதைப் போன்றே தற்போது வட மாகாணத்தில் இந்தப் பதிவு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று வட மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி சில்வா தெரிவித்தார்.

இந்தப் பதிவு நடவடிக்கையில் இராணுவத்தினர் எவ் விதத்திலும் தொடர்புபடவில்லை. அத்துடன் யாழ். குடாநாட்டில் மாத்திரமன்றி இந்தப் பதிவு நடவடிக்கை ஏற்கெனவே முன்னெடுக்கப்படாத அனைத்துப் பிரதேசங்களிலும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகிறது எனத் தெரிவித்த பொலிஸ் மா அதிபர், இந்த நடவடிக்கையினால் பொதுமக்களுக்கு எவ்வித சிரமங்களும் ஏற்படுத்தப்படுவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

யாழ். குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் இராணுவம் மற்றும் சிவில் உடைகளில் செல்லும் பாதுகாப்புத் தரப்பினர் பொதுமக்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக வீடுகள் மற்றும் பொதுமக்களை புகைப்படம் எடுக்கும் நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இது தொடர்பில் யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கருத்துத் தெரிவித்த போது,

இராணுவத்தினரால் அவ்வாறான தொரு நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை. இது சில அரசியல் பிரமுகர்களால் பரப்பப்படும் வதந்தியே என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை இராணுவத்தினர் உட்பட பாதுகாப்புத் தரப்பினர்களால் இவ்வாறான பதிவு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படுவதான முறைப்பாடுகள் எவையும் தனக்கு இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை என்று யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் தமிழ்மிரரிடம் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் நாடு முழுவதும் பொதுமக்கள் கணக்கெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், யாழ்ப்பாணத்திலும் அதற்கான நடவடிக்கைகளில் தானும் தான் சார்ந்த அரச அதிகாரிகளும் ஈடுபட்டு வருவதாக தெரிவித்த அரச அதிபர், இந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கைக்கு பொதுமக்களின் புகைப்படங்கள் அவசியப்படாத அதேவேளை, பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்பும் இதற்காக ஒருபோதும் பெற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். (எ-5)

## 'வணிகச் சரம்' நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலய வணிக மாணவர் மன்றத்தின் வணிகச்சரம் நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக பூநகரி உதவி அரசாங்க அதிபர் எஸ். அரசகுமார் கலந்துகொள்கிறார்.

நூல் வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.கணபதிப்பிள்ளையும், மதிப்பீட்டுரையை கிளிநொச்சி வலய வர்த்தக பாட ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபனும் நிகழ்த்துவர்.

முதல் பிரதியை இலங்கை வங்கியின் கிளிநொச்சிக் கிளை முகாமையாளர் எஸ்.சிவகுமாரன் பெற்றுக் கொள்வார். (எ)

## 15 வயது கிரிக்கெட் போட்டி

## கிளி. மகாவித்தியாலயத்தை வென்றது யாழ்ப்பாணக் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையே நட்பு ரீதியான 15 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 151 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டி 50 ஓவர்கள் பந்துப் பரிமாற்றம் கொண்டதாக நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 41.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 289 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அணித்தலைவர் மாதரூபன் 138 ஓட்டங்களையும், அபிராஸ் 58 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் ர.போகீசன் 04 விக்கெட்டுக்களையும், நா.தனுசன் 03 விக்கெட்டுக்களையும், இ.மதுசனன் 02 விக்கெட்டுக்களையும், அ.தனுசன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 13 ஓவர்களில் 61 ஓட்டங்களைப் பெற்று 09 விக்கெட்டுக்களை இழந்திருந்த நிலையில் இறுதி விக்கெட்டுக்காக ஆடிய ஜெ.நிதர்ஷன், ர.றஜீவன் ஆகியோர் 32.5 ஓவர்கள் வரை துடுப்பெடுத்தாடி 138 ஓட்டங்களைப் பெற்றபோது ர.றஜீவன் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஜெ.நிதர்ஷன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களைப் பெற்றார்.

இறுதி விக்கெட்டுக்காக ஆடிய இருவரும் இணைப்பாட்டமாக 77 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆகாஷ் 05 விக்கெட்டுக்களையும், நிரோசன், பிரவித் ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (எ-8)


**- தபால் மூலம் -**
**ஆறு மாத கால டிப்ளோமா**
**Course Length - Six Month**
20
JUNE 2011 TO NOVEMBER 2011
தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
• வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
• ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.06.2011




**வேலையாட்கள் தேவை**
கொம்பியூட்டர் ரைப்பிங், புத்தகம் கட்டுனர் அல்லது பழக விரும்புவோர் நேரில் வரவும்.
**ராஜ் கொம்பியூட்டர் பிறிண்டிங் சென்ரர்**
பரமேஸ்வராச் சந்தி,
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி
T.P. 021 222 0231
(5205)




**DMI** - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**A/L- 2013**
புவியியல் - N.BABU
அலகு- 'உலகின் பாறைகள்'
சனி, ஞாயிறு- 8 am
(5207)
• புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

# வடமராட்சி கிழக்கு மீள்குடியேற்றமும் அபிவிருத்தி பிரச்சினைகளும்



பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை Ph.D.Durham
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்.

**வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்கப் பிரிவு கிராம சேவகப் பிரிவுகள்**




வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க பிரிவு நீண்ட காலமாக யுத்தத்தினாலும் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியாலும் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரிவாகும். இவ் விரண்டு அனர்த்தங்களால் இப் பிரிவு மக்கள் பெரும் உயிர் இழப்புக்களையும் உடமை இழப்புக்களையும் மற்றும் வாழ் வாதாரங்களையும் இழந்து பெரும் தொடர் துன்பங்களுக்கு ஆளாகினார்கள். இப்பிரிவிலுள்ள 18 கிராம அதிகாரிகள் பிரிவில் இன்னும் 7 கிராம சேவகர் பிரிவில் மீள்குடியேற்ற செயற்பாடுகள் கண்ணிவெடிப் பிரச்சினையால் மேற்கொள்ளப்படவில்லை. இச் சூழ்நிலையில் மீள்குடியேற்றம், மீள் கட்டுமானம், வாழ் வாதார மேம்பாடுகள் மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் சீர் செய்வதில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளன.

புவியியல் ரீதியில் வடமராட்சி கிழக்குப் பிரிவு குடாநாட்டில் தனித்த சிறப்பு பண்புகளைக் கொண்ட பிரதேசமாகும். இது வடக்கே வல்லிபுரத்திலிருந்து தெற்கே சுண்டிக்குளம் வரை ஒரு மிக ஒடுக்கமான ஒரு மணல் நீட்ச்சியாக அமைந்துள்ளது. இந்த மணற்திட்டின் தூரம் 75 கிலோ மீற்றர் ஆகும். வடக்கில் அகலம் 5 கிலோ மீற்றராகவும் தெற்கு நோக்கி படிப்படியாக அகலம் குறைந்து 3 கிலோ மீற்றர் வரை ஒடுங்கி சுண்டிக்குளத்தில் ஒரு கிலோமீற்றர் வரையாகவுள்ளது. இதன் தென் எல்லை நல்ல தண்ணீர் தொடுவாய் ஆகும். இதுவே யாழ்ப்பாண மாவட்டத்தையும் முல்லைத் தீவு மாவட்டத்தையும் பிரிக்கும் எல்லையாகும். இப் பிரிவு மணல் படிவுகளால் ஆனதுடன் பெரும் மணற் குன்றுகளையும் கொண்டுள்ளது. மணற் காட்டுப் பகுதி நிறைவான தரைநீர் வளம் கொண்டதாக உள்ளதென அடையாளம் காணப்பட்டுள் ளது. இப்பிரிவு நீண்ட வளரும் மணற் கரையை கொண்டதாகும். கிழக்குக் கரை இந்து சமுத்திரத்தை நோக்கியதாகவும் மேற்குக்கரை வடமராட்சி / ஆணையிறவு கடல் நீர் ஏரிகளை எல்லைகளாக எல்லை யாகவும் கொண்டுள்ளது.

இப்பிரிவு 1971 இல் 10 ஆயிரத்து 678 மக்களைக் கொண்டிருந்தது. 1981 இல் இத்தொகை 13 ஆயிரத்து 678 ஆக அதிகரித்தது. இன்று இப் பிரிவின் மக்கள் தொகை அண்ணளவாக 10 ஆயிரத்துக்கு மேற்பட்டிருக்கலாம். மீள்குடியேற்ற செயற்பாடுகள் முழுமையாக இடம்பெறாததால் பிரிவின் சரியான எண்ணிக்கையை கணிப்பதில் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. நலன்புரி நிலையங்கள் மற்றும் இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் குறிப்பிடத்தக்க தொகையினர் வாழ்கின்றனர். சர்வதேச இடப் பெயர்வுகள் காலத்திற்கு முந்தைய இறப்புக்களாலும் மக்கள் தொகை அதிகரிப்பில் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருக்கலாம் என கருத இடமுண்டு.

இப்பிரிவில் துரித இயல்பு நிலையை யும், அபிவிருத்தியையும் முன்னெடுக்க பின்வரும் நடவடிக்கைகள் முக்கியமான வையாகும். வடமராட்சி கிழக்கில் மணற் காடு, குடத்தனை, குடத்தனை கரையூர், பொற்பதி, அம்பன் ஆகிய ஐந்து கிராம அதி காரிகள் பிரிவுகளில் கூடுதலான இயல்பு வாழ்க்கை காணப்படுகின்றன. இங்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களும் நாகர் கோவில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும் மீளக் குடியமர்த்தப்பட்டும் தற்காலிக/ நிரந் தர வதிவிடங்கள் அமைக்கப்பட்டு இவர்க ளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன. நாகர்கோவில் கிழக்கு, நாகர் கோவில் மேற்கு , நாகர் கோவில் தெற்கு ஆகிய மூன்று பகுதிக ளிலும் கண்ணிவெடிகள் அகற்றப்படா மையே மீள்குடியேற்றத்திற்கு காரணம் என கூறப்படுகின்றது.

செம்பியன் பற்றுவடக்கு, செம்பியன் பற்று தெற்கு, மருதங்கேணி ,வாதிரையான், உடுத்துறை, ஆழியவளை ஆகிய பிரிவுகளில் அண்மையில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு புனர்வாழ்வு புனருத்தாரன பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மக்கள் புது வாழ்வு காண கடுமையாக முயன்று வருகின்றனர். கல்வி, சுகாதாரம், நிர் வாகம், கூட்டுறவு போன்ற நிறுவனங்கள் தங்கள் ஆற்றலை மேம் படுத்தவும் சேவையை வழங்கவும் முயன்று கொண்டிருக்கின்றன. கட்டுமானப் பணிகள் ஆரம்பக்கட்டங்களில் உள்ளன. புதுக்காடு- செம்பியன்பற்று வீதியில் உள்ளபாலவேலைகள் நிறைவு பெற்று போக்குவரத்து இடம் பெறுகின்றது. எனினும் இயல்பு வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான சமிக்ஞைகள் தெரியினும் நல்ல நிலையடைந்து அபிவிருத்தியை முன்னெடுக்க சிறிது காலம் எடுக்கும்.

வெற்றிலைக் கேணி, முள்ளியான், போக்கறுப்பு ஆகிய பிரிவுகளை சேர்ந்த மக்களில் ஒருபகுதியினர் இராமவில், குடத்தனை நலன் புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேற்கூறிய மூன்று பிரிவிலும் மீள்குடியேற்றம் அண்மையில் இடம்பெற இருப்பதாக தெரிய வருகின்றது. இது குறித்து பத்திரிகையில் அடிக்கடி செய்திகள் பிரசுரமாயிகின.

சுண்டிக்குளப் பிரிவில் நிரந்தரமாக வாழும் மக்கள் மிகக் குறைவு. இங்கு காலத்திற்கு காலம் இடம்பெயரும் மீனவர்கள் வாடி அமைத்து மீன்பிடி தொழிலை செய்து வருவதும் பின்னர் தங்கள் சொந்த இடங்க ளுக்கு மீள்வதும் வழக்கம். சுண்டிக்குளத்தில் மீளக் குடியமர்வுக்கும் தொழிலுக்கான அனு மதி போன்றன கண்ணிவெடி அகற்றப்படாமையால் இன்னும் முடிவுகள் எடுக்கப்படவில்லை என தெரிய வருகின்றது.

வடமராட்சி கிழக்குப் பிரிவில் 5 வகை நிலைப்பாட்டில் இன்றைய நிலை காணப்படுகின்றது. இதனால் இப்பிரிவின் அபிவிருத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் இத்தகைய ஏற்ற இறக்க நிலைமைகள் நீக்கப்பட வேண்டும். இதனால் மீள் குடியேற்றத்தினை துரிதப்படுத்துவதன் மூலம் நலன்புரி நிலையங்களிலும் இடம்பெயர்ந்து வாழ்வோர் தங்கள் இருப்பிடங்களுக்கு திரும்பின் அவர்களின் துன்பம் நீக்கப்படுவதுடன் அபிவிருத்தி செயற்பாடுகள் துரிதமாக இடம்பெற வழிபிறக்கும்.

இப்பிரிவு 2009 இல் யுத்தம் முடியும் வரை இரண்டு கட்டுப்பாட்டுப் பிரிவுகளாக இருந்தன. மணற்காடு, குடத்தனை, குடத்தனை கரையூர், பொற்பதி, அம்பன் ஆகிய பிரிவுகள் அரச கட்டுப்பாட்டுக்குள்ளும் செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு , மருதங்கேணி, வாதிரையான், உடுத்துறை, ஆழியவளை , வெற்றிலைக் கேணி, முள்ளியான்,போக்கறுப்பு, சுண்டிக்குளம் ஆகியன எல்.ரி.ரி.ஈ.யின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. நாகர் கோவில் பகுதிகள் யுத்த முன்னரங்கு பகுதியாக இருந்தன. யுத்தம் முடிந்தும் கண்ணிவெடிப் பிரச்சினையால் நாகர் கோவில் ஊடாக செம்பியன்பற்று பருத்தித்துறை போக்குவரத்து இன்னும் இடம்பெறாமையால் இப்பிரிவு மக்கள் போக்குவரத்தில் பெரிதும் கஷ்ரப்படுகின்றனர். இன்று கொடிகாமம் புதுக்காட்டுச் சந்தி வழியாக இடம்பெறுகின்றது. இதனால் பெரும் பணச் செலவு, நேரச் செலவு, களைப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளது. ஆகவே இப்பிரிவின் துரித வளர்ச்சிக்கும் மக்களிடையேயான கூடிய இணைப்பை ஏற்படுத்தவும் நிர்வாகத்தை இலகுபடுத்தவும் காலம் தாழ்த்தாது நாகர் கோவில் பகுதியில் கண்ணிவெடி அகற்றி செம்பியன் பற்று - பருத்தித்துறைவீதி பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட வேண்டும். இதனால் மக்கள் பல நன்மைகள் பெறுவதுடன் பொருளாதார செயற்பாடுகள் வளர்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

இப்பிரிவின் இன்றைய பொருளாதார வாழ்வாதார நிலைகள் திருப்தி கரமானதாக வில்லை. வறுமை, வேலையின்மை, பருவ கால வேலையின்மை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் பொருளாதார நிலைமைகள் மற்றும் சமூக உளவியல் நிலைமைகள் மிகவும் பிரச்சினைக்குரியனவாகவுள்ளன. இப்பிரிவில் குடத்தனை, குடத்தனை கரையூர், மணற்காடு, பொற்பதி, அம்பன் ஆகிய பிரிவுகளில் வறுமை, தொழி லின் மை முக்கியமான பிரச்சினையாக இருப்பினும் பொதுவாக இங்கு சமூக பொருளாதார நிலை மைகள் ஓரளவு திருப்தி கரமாகவுள்ளன. இங்கு குடத்தனைக் கரையூர், மணற்காடு, பொற்பதி பிரிவுகளின் வாழ்வாதாரம் மீன்பிடியில் தங்கியுள்ளது மீன் பிடித் துறை பல்வகைப் பிரச்சினைகளை எதிர்கொண்டிருப்பதால் மீனவ மக்களின் வாழ்க்கைத் தரம் குறைவாகவே உள்ளது. பருவகால வேலையின்மை முக்கிய பிரச்சினையாக உள்ளது.

அம்பன், குடத்தனைப் பிரிவுகளின் வாழ்வாதாரம் நலிந்த விவசாய பின்புலத்தை கொண்டிருப்பதால் இவர்களது வாழ்க்கைத் தரமும் குறைவாகவே உள்ளது. இங்கு விளைதிறன் குறைந்த நெற்செய்கையும் சிறிதளவு டுபாய் பூசனிச் செய்கையும் மற்றும் நில புலங்களில் இருந்து கிடைக்கும் சிறு வருமானங்களையே அடிப்படையாக கொண்டது.

அண்மையில் மீள்குடியேறிய செம்பியன் பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, வாதிரையான், உடுத்துறை பிரிவு மக்களின் வாழ்வாதாரம் பிரதானமாக மீன் பிடியிலேயே தங்கியுள்ளது. மிக சிறு பிரிவினரே குறிப்பாக மருதங்கேணி மக்கள் விவசாயத்திலும் நிலபுல வருமானத்திலும் தங்கியுள்ளனர். மீளக் குடியேறிய மக்களின் வாழ்வாதார செயற்பாடுகள் பல வழிகளில் அரசாலும் அரசசார்பற்ற நிறுவனங்களாலும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை முழுமையான பலனைத் தர இன்னும் சில காலங்கள் எடுக்கலாம். மீன்பிடித்துறை யின் விருத்திக்கு பெருமளவு முதலீடுகள் தேவைப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஆழ்கடல் மீன்பிடித்துறை விருத்தி பெற்றால் தான் இப் பகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும். இங்கு வறுமை, வேலையின்மை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணி க்கை உயர்வாகவுள்ளன. இதனால் அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களின் துடிப்பான செயற்பாடுகள் இங்கு தேவைப்படுகின்றன. கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு , சிறு கைத்தொழில்கள் ஆகிய முயற்சிகளை மீன் பிடியுடனும் விவசாயத்துடனும் முன்னெடுக் கப்பட்டால் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த முடியும், வறுமையை நீக்கமுடியும், தொழில் வாய்ப்பை பெருக்க முடியும். மக்களின் உணவு ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த அரசு மற்றும் நிறுவனங்களின் நலன் சேர் நடவடிக்கைகள் இங்கு இன்னும் சில காலங்களுக்கு தொடர வேண் டும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் அவர்கள் இன்று எதிர்நோக்கியுள்ள அடிப் படை வாழ்வாதார பிரச்சினைகளை சமூக உளவியல் பிரச்சினைகளில் இருந்து ஓரள வாவது ஆறுதல் காண முடியும்.

**Vada.Eastt DS. Div.**

J/418 Manalkadu
J/419 Kudathanai
J/420 KudathanaiKaraiyoor
J/421 Potpathi
J/422 Ampan
J/423 NagarkovilEast
J/424 NagarkovilWest
J/425 NagarkovilSouth
J/426 ChempiyanpattuNorth
J/427 ChempiyanpattuSouth
J/428 Maruthankarny
J/429 Vathirayan
J/430 Uduthurai
J/431 Aliyavalai
J/432 Vetrilaikerny
J/433 Mulliyan
J/434 Pokkaruppu
J/435 Chundikulam

வடமராட்சி கிழக்கில் தெங்குச் செய்கை வாழ்வாதார பயிராக இருப்பதுடன் இதிலிருந்து மக்கள் குறிப்பிடத்தக்க வருமானத்தையும் பெற்று வந்தனர். முள்ளியான், போக்கறுப்பு, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளில் சிறிய தென்ன ந் தோட்டங்களும் இருந்தன. யுத்தத்தாலும் சரியான பராமரிப்பு இன்மையாலும் இப் பிரிவு தென்னந் தோட்டங்கள் அழிவுற்றும் வளம் குன்றியும் போய் விட்டன. இப்பிரிவின் பொருளாதார மேம் பாட்டு செயற்பாடுகளில் தென்னை மீள் நடுகைக்கு மிக முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும்.

மணற்காடு, குடத்தனை கரையோரப் பிரிவுகளில் சுனாமியாலும் யுத்தத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்ல பல வீடமைப்புத் திட்டங்கள் சர்வதேச, அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வீடமைப்புத் திட்டங்கள் அமைய நீண்ட காலம் எடுத்த பொழுதும் இன்று இம் மக்கள் தரமான வீடுகளில், சில பகுதிகளில் மின்சார வசதிகளுடன் கூட வாழும் பாக்கியம் பெற்றுள்ளனர்.

(தொடர்ச்சி 18 ஆம் பக்கம் பார்க்க...)




தெல்லிப்பளை பிரதேச அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் சகல திணைக்கள தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதி நிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறலை கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சுக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறலை கட்டுப்படுத்துமாறு கோரி வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பு மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் என்பன கடற்றொழிற்றுறை அமைச்சுக்கு கடிதம் அனுப்ப தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹர்மன் குமார தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சம்மேளனத்தில் நேற்று தென்னிலங்கை மீனவர் குழுவினர்களுக்கும் வட பகுதி மீனவர்களுக்குமிடையில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்கு பல வழிகளிலும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறும் ரோலர் படகுகளினால் வடபகுதி மீனவர்கள் மட்டுமல்லாது தென்பகுதி மீனவர்களும் பாதிப்படைகின்றனர்.

இந்த நிலையை விளக்கியே கடற்றொழில் அமைச்சருக்கு கடிதம் அனுப்ப நாம் தீர்மானித்துள்ளோம்.

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறல் தற்போது கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

இருப்பினும் இந்த நிலை தொடரும் என்பதை எவரும் உறுதிப்படுத்திக் கூற முடியாது.

எதிர்வரும் ஜுலை மாதம் 23 ஆம் திகதி வரை மட்டும் இந்த அத்துமீறல் கட்டுப்படுத்தப்படாது தொடர்ச்சியாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதியிடமும் இந்த நிலை தொடர்பாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்திருந்தார்.

தென்னிந்திய மீனவர்களின் ரோலர் படகுகளினால் கடற்றொழில் பாதிப்படைவதோடு உள்ளூர் மீனவர்களிடையே ஏற்படும் பிரச்சினை காரணமாகவும் பல மீனவர்களின் தொழில் நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் எவ்வாறு மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனரோ அதேபோன்றே தென்பகுதி மீனவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

தென்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் பல தீவுப்பகுதிகள் சுற்றுலாத் துறைக்கு தாரை வார்த்து விடப்பட்டுள்ளது. இதனால் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்த தொடர்ந்து அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அதனால் இந்திய மீனவர்களின் வருகை யை தடை செய்யவுள்ளதாகவும் உள்ளூர் மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கவும் தாம் பாடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-6)




# மூன்றாம் திருமுறை முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதம் ஒருகோயில் மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என யாழ். குடாநாட்டு ஆலயங்கள் தோறும் பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகிறது.

அந்த வகையில் இரண்டாந் திருமுறை முற்றோதல் கொக்குவில் மேற்கு மணியர் பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் நடைபெற்று இன்று வியாழக் கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும் ஆலயப் பூசையைத் தொடர்ந்து அழகிய சுந்தர முத்துப்பல்லக்கில் நாயன்மார் நால்வர் திருமுறைச் சுவாமிகள் வீதியுலாவாக எழுந்தருளி கொக்குவில் மஞ்சவணப்பதி அருள்மிகு ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்திற்கு சென்றடைந்து 3 ஆந் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும். தினமும் மாலை 5 மணி பூசையுடன் முற்றோதல் தொடர்ந்து நடைபெறும். (ஸ்ரீ)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேசமட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யா/ கலாநிதி ஆ.தியாகராசா மகா வித்தியாலய நடராஜா மண்டபத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் யாழ். மாவட்டநாடாளு மன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலென்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு பிரதேச அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடவுள்ளார். (ஸ்ரீ)

# சைக்கிளில் சென்ற பெண்ணின் கைப்பை அபகரிப்பு

(சாவகச்சேரி)

துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் கைப்பை மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரால் அபகரிக்கப்பட்டுள்ளது

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு மீசாலையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் துவிச்சக்கர வண்டிக் கூடைக்குள் கைப்பையை வைத்துச் சென்றுள்ளார்.

அந்த வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் அக் கைப்பையை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார். அவரை அங்கு நின்றிருந்த இளைஞர்கள் துரத்திச் சென்றும் பிடிக்க முடியாமல் போய் விட்டது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-29)

# கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா

வதிரி சி. ரவீந்திரன் எழுதிய மீண்டு வந்த நாட்கள் எனும் கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி க.மூ.சின்னத்தம்பி அரங்கில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன், சிறப்புவிருந்தினராக தமிழ்-சிங்கள மொழி பெயர்ப்பாளர் உபாலி லீலாரட்ண ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி நிகழ்த்த முதற்பிரதியை சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை உரிமையாளர் சிதம்பரப்பிள்ளை சிவம் பெற்றுக்கொள்ளவுள்ளார். நூலின் அறிமுகவுரையை திக்குவல்லை கமால் ஆற்ற, நயவுரையினை யாழ். பல்கலைக் கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், மேமன்கவி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அத்துடன் கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# யாழ். வணிகர் கழகத்தால் வாழ்வாதார உதவிகள்

(அச்சுவேலி)

யாழ்.வணிகர் கழகத்தினால் யாழ். மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு பிரதேச செயலகங்களூடாக கோழிவளர்ப்புக்கான கூடுகளும் கோழிக் குஞ்சுகளும் தண்ணீர்க்கான்களும் உணவிற்கான பாத்திரங்கள், கோழித்தீவனங்கள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் சண்டிலிப்பாய் மற்றும் கோப்பாய்க்குட்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

கோப்பாய் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வணிகர்கழக தலைவர் இராஜசேகரம் மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளனர்.

இவ் உதவித்திட்ட வழங்கலிற்கான 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பை இருபாலையில் அமைந்துள்ள ஏ. எம். ரி. நிறுவனத்தினர் வழங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஸ்ரீ-70)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் எதிர்வரும் ஜுலை மாதம் 5 ஆம் திகதி மாலை 6 மணிக்கு சப்பறத்திருவிழாவும் 6 ஆம் திகதி காலை 8 மணிக்கு இரதோற்சவமும் நடைபெறவுள்ளது.

மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஸ்ரீ)

# செங்கல்பட்டு சிறையில் இலங்கை அகதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

தமிழகத்தின் செங்கல்பட்டு பூந்தமல்லி சிறப்பு முகாம்களிலும் மாவட்ட கிளைச் சிறைகளிலும் சில ஈழத் தமிழ் அகதிகள் சிறைபட்டுள்ளனர். இதில் செங்கல்பட்டு கிளை சிறையில் இலங்கை அகதிகள் 44 பேர் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீது முறையான ஆவணங்கள் இன்றி தமிழகத்திற்குள் வந்தது உட்பட பல்வேறு வழக்குகள் உள்ளன. தங்கள் மீதான வழக்குகளை விரைந்து முடிந்து விடுதலை செய்ய வேண்டும் என்று கூறி இலங்கை அகதிகள் 10 பேர் செங்கல்பட்டு சிறையில் கடந்த மாதம் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிகாரிகள் அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி கடந்த 6ஆம் திகதிக்குள் அரசிடம் தெரிவித்து நடவடிக்கை எடுப்போம் என்று கூறியதாக தெரிகிறது. ஆனால் இதுவரை அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளை விடுதலை செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததை கண்டித்து நேற்று முன்தினம் காலை மீண்டும் இலங்கை அகதியொருவர் போராட்டத்தில் ஈடுபட்டார். நேற்று காலை அவருடன் மேலுமிருவர் இணைந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்ததும் செங்கல்பட்டு தாசில்தார் மல்லிகா கூடுதல் பொலிஸ் சூப்பிரண்டு பொன்னி ஆகியோர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட அகதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனாலும் அகதிகள் 3 பேரும் தொடர்ந்து உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)


# புலமையும் வறுமையும் நூலாக்கம்



அடியேனின் சிந்தையின் ஆக்கங்களாக சுமந்து வர இருக்கும் "புலமையும் வறுமையும்" இந்நூல் முந்நூறு பக்கங்களுடன் எமது யோகக்கலை தொடர்பான படங்களும் விபரத் தொகுப்புடன் வெளிவரவுள்ளது. வறுமையில் வாடி வதங்கும் தமது ஆக்கங்களை வெளியிடமுடியாத சில புலவர்களில் ஐந்து புலவர்களின் ஆக்கங்களை சுமந்துவரும் புலமையும் வறுமையும் என்ற இந்நூலை வெளியிடுவதற்கு அதிகபணம் தேவைப்படுவதனால் எமது அன்புக்குரிய அடியவர்களின் உதவியையும் ஒத்தாசையினையும் வேண்டி நிற்கும் சிறு அடியேன் துர்க்கா கவிஞானி கு.கமலேஸ்வரன்.

தங்களது பெயர், விலாசம், பணம் என்பன புத்தகத் தொகுப்பில் இடம்பெற இருப்பதனால் விபரமாக தந்துதவவும்.

துர்க்கா கவிஞானி கு.கமலேஸ்வரன்
வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழை.
தொலைபேசி எண்: 0771043425

வங்கித் தொடர்புகளுக்கு:-
இலங்கை வங்கி K.K.S.கிளை-7745546

(5198)



# தேவை

**AAA Movies International**

நிறுவனம் தயாரிக்கும் 'பனைமரக்காடு'

திரைப்படத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்ற பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் உடனடியாகத் தேவை.

1. Camera Unit
2. Video Editing & Photoshop
3. Production Manager
4. Director Dept Assistant
5. Art Direction Assistant
6. Costume Dept Assistant
7. Mess Dept Assistant

பங்குபற்ற விரும்புவோர் உடனடியாக நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:

**AAA Movies International**
#92, Brown Road, Jaffna.
Tel: 021 320 7386, 021 373 4742

(5201)



# இணுவில் கந்தசுவாமி கோயில் மஹோற்சவம்



## பத்தாம் திருவிழா (16.06.2011)

### புது மணங் கமழுதின்றே...

உலகப் பெரு மஞ்சத்திலே
உலா வரும் உன் அழகைக்காண
வானுலகத் தேவர் வந்தே-உனை
வாழ்த்தியே வணங்கிடவே
பன்னீர்ப் புஷ்பங்களே-எம்
பால முருகனுக்கே பொன்மாறி தூவிடவே
புதுமணங்கமழுகின்றே...

சண் ஜெகன்

(5114)

இணுவில் கந்தனின் 12 ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழாவின் நேரடி ஒளிபரப்பை 18.06.2011 இரவுள 7.00-9.00 மணிவரை www.sivantv.com என்ற இணையத்தளத்தின் ஊடாக கண்டுகளிக்கலாம்.

**10 ஆம் திருவிழா உபயகாரர்**


# சவுதியில் சித்திரவதைக்குள்ளாகி நாடு திரும்பிய இலங்கைப் பெண்



மத்திய கிழக்கு நாட்டிற்கு வீட்டுப்பணிப் பெண்ணாக சென்ற வாகரையைச் சேர்ந்த பெண் ஒருவர் வீட்டு எஜமானால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கண்கள் பார்வையிழுந்து உடலின் பல்வேறு உறுப்புகள் செயலிழுந்து பாதிக்கப்பட்ட நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு முகவர் நிலையத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை இவர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மட்டக்களப்பு வாகரை மத்தி கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 31வயதான மனோகரன் பவானி என்பரே இவ்வாறு அங்கவீனராக வீடு திரும்பியுள்ளார். இரண்டு பிள்ளைகளின் தயாரான இவர் குடும்ப வறுமை காரணமாக கடந்த 2003ஆம் ஆண்டு சவுதி அரேபியாவின் தமாம் பிரதேசத்தின் பரிதா எனுமிடத்தில் பணிப்பெண்ணாக கடமையாற்றச் சென்றார்.

சுமார் 2 வருடங்கள் கடந்தும் சம்பள பணம் தர மறுத்த எஜமானிடம் கேட்ட போதே இந்த விபரீதம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார்.

தனக்கு கண்களில் இரசாயன பதார்த்தமொன்றை ஊற்றி செயல் இழக்கச் செய்ததுடன் தன்னை கயிற்றினால் கட்டி தொங்கவிடப்பட்டு தீ வைத்ததாகவும் இதனால் தலைமுடி மற்றும் காதுப்பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அத்துடன் இரும்பு கம்பியினால் தலை மற்றும் ஏனைய இடங்களில் தாக்கியதுடன் இருப்பு கோலால் சூடு வைத்து துன்புறுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனக்கு ஏற்பட்ட நிலைமையை வெளியில் தெரிவிக்கவோ, கடிதம் மூலம் தொடர்பு கொள்ள முடியாத நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் மனோகரன் பவானி தெரிவித்துள்ளார்.

அங்குள்ள பொலிஸாரிடம் தனக்கு ஏற்பட்ட நிலைமையை தெரிவித்தும் பலனின்றி மீண்டும் எஜமானிடம் கையளித்ததனால் சித்திரவதை மேலும் அதிகரித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

தனக்கு ஏற்பட்ட அவல நிலைமைக்கு காரணமான குறித்த நபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க சவுதி அரசாங்கத்தை மனித உரிமை அமைப்புக்கள், சமூக அமைப்புக்கள், கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

(ஸ்ரீ-2)




**CDB நிலையான வைப்புக் கணக்கில் ரூ.50,000 சேமித்து புத்தம் புதிய 3 ஜீப்களை வென்றிடுங்கள்!**

CDB அதிர்ஷ்டம்

CDB சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் உங்கள் நண்பன்

| | மாதாந்த வ.வீ. | முதிர்ச்சியில் வ.வீ. | வ.தே.வீ. மாதாந்தம் | வ.தே.வீ. முதிர்ச்சியில் |
|---|---|---|---|---|
| 1 மாதம் | | 9.50% | | 9.92% |
| 3 மாதங்கள் | 10.00% | 10.50% | 10.47% | 10.92% |
| 6 மாதங்கள் | 10.50% | 11.00% | 11.02% | 11.30% |
| 12 மாதங்கள் | 11.00% | 11.50% | 11.57% | 11.50% |
| 18 மாதங்கள் | 11.25% | 12.50% | 11.85% | 12.20% |
| 24 மாதங்கள் | 11.50% | 12.75% | 12.13% | 12.03% |
| 36 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 11.60% |
| 48 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 11.04% |
| 60 மாதங்கள் | 11.50% | 13.00% | 12.13% | 10.53% |

கிளைகள்: யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா

இன்றே பேசுங்கள்: 0117 388 388

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி.

இல.18, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
பதிவிலக்கம்: PB232PQ
www.cdb.lk

WP/GT/3333

இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் 1988ம் ஆண்டு 78ம் இலக்க நிதிக்கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

RAM Rating (Lanka) Limited BBB-/P3

தாபிக்கப்பட்டது: 1995 செப்டெம்பர் 7

# இன்று ஒரு தகவல்

## வெற்றியின் இரகசியம்

சில பேருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சில பேருக்கு தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும்.

இதிலுள்ள இரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் இந்தக் கதையை நீங்கள் படியுங்கள்.

ஜப்பானில் பெரிய வீரர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நொபுநாகா.

அவரிடம் படைவீரர்கள் கொஞ்சப் பேர்தான் இருந்தார்கள்.

சிறிய படைப்பலத்தை வைத்துக்கொண்டு பெரிய பெரிய படைகளை எல்லாம் அவர் முறியடித்தார். அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர் நொபுநாகா.

ஒரு சமயம் அவர் எதிரியின் மீது படையெடுத்துச் சென்றிருக்கிறார்.

அப்போது அவர் படைவீரர்களுக்கும் தளபதிகளுக்கும் ஒரு சந்தேகம் வந்து விட்டது.

இப்போரில் நாம் வெற்றி பெற முடியுமா? என்பது தான் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம். இருந்தாலும் இதை எப்படி தலைவருக்கு தெரிவிப்பது?

மிகவும் யோசனை செய்தார்கள்... கடைசியாக கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு மெதுவாக கேட்டுவிட்டார்கள்.

தலைவர் நொபுநாகா பார்த்தார்.

அவர் "சரி! இதை நாம் முடிவு செய்ய வேண்டாம். புத்த விகாரைக்கு போய்விட்டு வருவோம். 'பூவா தலையா' போட்டு பார்ப்போம். என்ன வருகிறதோ அதன்படி செயற்படுவோம். என்ன சொல்கிறீர்கள் ?.. ஏனென்றால் போருக்கு செல்லும் போது முழுமனதுடன் போக வேண்டும்... மனதில் ஊசலாட்டம் இருக்க கூடாது!" என்று கூறினார்.

அவர் கூறியதற்கு தளபதியும் படை வீரர்களும், "சரி" என்று ஒப்புக்கொண்டார்கள்.

உடனே அவர்கள் எல்லோரும் அங்கே பக்கத்தில் இருந்த புத்தர் கோயிலுக்கு சென்றார்கள்...

தலைவர் உள்ளே சென்றார்.

எல்லோரும் ஆவலுடன் வெளியே காத்துக் கொண்டிருந்தார்கள்.

ரொம்ப நேரத்துக்கு பின்னர் தலைவர் நொபுநாகா புத்தர் கோவிலிருந்து வெளியே வந்தார். அவர் தளபதி- துணைத் தளபதிகள் எல்லோரையும் அருகில் அழைத்தார்.

அவர்கள் முன்னிலையில் ஓர் தங்ககாசை எடுத்தார்.

"இதோ பாருங்கள்... இப்போது 'பூவா தலையா' போட்டுப் பார்க்கலாம். பூ- விழுந்தால் தோற்று விடுவோம் .தலை- வந்தால் வெற்றி பெறுவோம் .பூ விழுந்தால் போர் வேண்டாம்... அதை தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்கு போவோம். விதி இப்போது நம்பிக்கையில்தான் இருக்கிறது. இங்கே என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ அதன்படி நாம் நடந்து கொள்வோம்! "என்று கூறிவிட்டு தங்ககாசை சுண்டினார்.

அது சுழன்று போய் 'கணீர் 'என்று தரையில் விழுந்தது.

எல்லோரும் ஆவலுடன் அதைக் குனிந்து பார்த்தார்கள்.

தலை விழுந்திருந்தது.

அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி... ஆரவாரம். அதன் பின்னர் அவர்களுக்கு போருக்கு போவதா வேண்டாமா என்ற சந்தேகம் வரவில்லை.

எல்லோரும் உறுதியான முடிவோடு போருக்கு சென்றார்கள். வெற்றியோடு திரும்பி வந்தார்கள்.

கோலாகலமாக வெற்றி விழா நடந்து கொண்டிருந்தது. அப்போது தளபதி உரை நிகழ்த்தினார்.

அதில் அவர் "இந்த வெற்றியை தங்க நாணயம்தான் முடிவு செய்தது ..அதனால் விதியை யாராலும் வெல்ல முடியும் என்று கூறினார்.

அவர் பேசிவிட்டு உட்கார்ந்தார். இப்போது தலைவர் நொபுநாகா தன்னிடம் இருந்த அந்த தங்கக்காசை எடுத்து இரகசியமாக தளபதியிடம் கொடுத்தார் .

தளபதி அதை வாங்கி பார்த்தார் .அந்த நாணயத்தில் இரண்டு பக்கமும் தலைதான் இருந்தது!

இதிலிருந்து என்ன தெரிகிறது?

வெற்றியின் இரகசியம் என்ன? மன உறுதிதான்.

எதை செய்தாலும் மனதில் குழப்பம் இருக்கக்கூடாது. "எண்ணித் துணிக கருமம்!" இது வள்ளுவர் வாக்கு.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# போர்க்குற்றமிழைத்தோருக்கு தண்டனை வழங்குவதன் மூலமே நிரந்தர சமாதானத்தை நிலைநாட்ட முடியும்

## கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபை ஈசன் தெரிவிப்பு



இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் நீதியான விசாரணை நடத்தி குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்குவதன் மூலமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபை ஈசன் தெரிவித்துள்ளார்.

கனேடிய பாராளுமன்றத்தில் நேற்று என்.டி.பி.கட்சியும் கனேடிய தமிழர் பேரவையும் இணைந்து ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினர். கனடாவின் முன்னணி தேசிய ஊடகங்கள் பல கலந்து கொண்டு இம்மாநாட்டில் என்.டி.பி.கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி ராதிகா சிற்சபை ஈசன், கனேடிய தமிழர் பேரவை சார்பில் யோர்க் பிராந்திய கல்விச் சபை உறுப்பினரும் கனேடிய தமிழர் பேரவையின் உப தலைவருமான செல்வி வனிதா நாதன், கனேடிய தேசிய பேச்சாளர் டேவிட் பூபால பிள்ளை ஆகியோர் பங்கேற்றனர்.

ஊடகவியலாளர் மாநாட்டை ஆரம்பித்து வைத்து கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் செல்வி ராதிகா சிற்சபைஈசன் உரையாற்றுகையில், கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இலங்கை போர்க்குற்ற விசாரணைகளுக்கு சகல ஒத்துழைப்புகளையும் வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

சனல் 4தொலைக்காட்சியில் வெளியிடப்பட்டுள்ள ஆவணப்படம் தொடர்பாக அவர் கூறுகையில், போர்க்குற்றங்கள் தொடர்பாக பல விடயங்கள் நாம் கடந்த காலங்களில் கேள்வியுற்ற போதும் இப்போது அவற்றை ஆதாரங்களோடு காணக்கூடியதாக இருக்கிறது.

நீதியான விசாரணை மற்றும் குற்றமிழைத்தோருக்கான சரியான தண்டனை வழங்கல் மூலமாக மட்டுமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும். ஐக்கிய நாடுகள் சபையின் இதுதொடர்பான நடவடிக்கைகளுக்கு என்.டி.பி. கட்சி எப்போதுமே ஆதரவு வழங்கியதோடு கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் இச் செயற்பாட்டில் ஒன்றிணையவேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக் கொள்கிறது.

பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்கிடவும் கலாசார வேறுபாடுகளற்ற சமாதானத்தை நிலைநாட்டவும் போர்க்குற்றம் புரிந்தோர் தண்டிக்கப்பட வேண்டும்.

மனித உரிமை களுக்கும் நீதிக்கும் எப்போதும் குரல் கொடுக்கும் கனடா இந்த விடயத்தில் அழுத்தமாக குரல்கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவரை தொடர்ந்து செல்வி வனிதா நாதன் உரையாற்றுகையில், இன்று சர்வ தேசத்தின் கவனத்தையே ஈர்த்திருக்கும் இலங்கையின் இந்த போர் குற்றங்கள் தொடர்பாக அமெரிக்க செனற் சபையும்பிரித்தானிய பாராளுமன்றமும் மிகுந்த கண்டனம்தெரிவித்துள்ளன.

இந்நாடுகளுடன் நெருங்கிய உறவைப்பேணும் கனடாவும் இவ்விடயம் குறித்து உரத்த குரல்கொடுக்க வேண்டுமென்றும் பிரித்தானியாவும் அமெரிக்காவும் வலியுறுத்துவது போல இலங்கை சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட முனைந்து செயற்பட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 25 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 50 |
| தக்காளி | 25 | 60 | 35 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 |
| கோவா | -- | 70 | 60 |
| கரட் | 60 | 100 | 50 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 45 | 80 | 60 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 35 | 100 | 30 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- |
| பயற்றங்காய் | 70 | 100 | 100 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 |
| பீற்றூட் | 65 | 80 | 80 |
| கறிமிளகாய் | 50 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 300 |
| போஞ்சி | -- | 130 | -- |
| கத்தரிதம்புள்ள | 10 | 20 | 25 |
| கீரை - 1 பிடி | 3-5 | 20 | 20 |
| தேசிக்காய் | 140 | 130 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 45 |

# இராசி பலன்

*16.06.2011*

*(ஆனி01, வியாழக்கிழமை)*

*சூரிய உதயம் காலை 5.55மணிக்கு*

*பிரதமை பின்னிரவு 1.33மணிவரை*

*மூலம் பின்னிரவு 1.58 மணிவரை*

*இராகுகாலம் - 1.23-2.53 மணி வரை*

*சுபநேரம்- 7.23- 8.53 மணிவரை*

**மேடம்** நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் தீரும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

**இடபம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும், உற்றார், உறவினரிடம் பேசும் போது கவனம் தேவை.

**மிதுனம்** புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்களின் மூலம் நல்ல செய்திகள் கிடைக்கலாம், குடும்ப சுகமுண்டு.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், ஆரோக்கியமான நாள்.

**சிங்கம்** வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம், அரைகுறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள்.

**கன்னி** வாகன யோகமுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் புதிய உற்சாகம் பிறக்கும்.

**துலாம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும், தொழில் முன்னேற்றமுண்டு, பிரயாண சுகமுண்டு, புதிய நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழிபோடும் நாள், வருமானம் திருப்தி தரும், சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தொழிலில் கூட்டாளிகள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**மகரம்** வேறு ஊர்களுக்கு செல்லும் எண்ணம் உருவாகும், உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறும், சுப செய்திகள் செய்து மகிழ்வீர்கள்.

**கும்பம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், நண்பர்களின் ஒத்துழைப்போடு நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பெருமையான நாள்.

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொலைபேசி அழைப்புக்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

வளவன்

# இல்லாததைக் கற்பனை செய்யும்

# 2 ஆம் எண்ணில் பிறந்தவர்களே!

2 ஆம் எண்ணைப் பற்றி அனைத்து நூல்களும் மக்களை தேவையில்லாமல் பயப்படுத்துகின்றன. உண்மை அதுவன்று. பெரும் மரங்கள் சாய்ந்தாலும் நாணல் மட்டும் நிலைத்து நிற்கும். ஒவ்வொருவர் வாழ்விலும் புயல் (சோதனைகள்) என்பது நிச்சயம் ஏற்படும். அதற்கு எந்த எண்ணும் விதிவிலக்கல்ல. மற்ற எண்காரர்கள் துவண்டு விடும்போது இவர்கள் மட்டும் வாழ்க்கையின் சோதனைகளில் வளைந்து கொடுத்து முன்னேறி விடுவார்கள்.

பகலுக்கு ராஜா சூரியன் என்றால் இரவுக்கு ராணி சந்திரன். சூரியன் தந்தைகாரன் சந்திரன் மாதாகாரகன். எனவே இந்த எண்காரர்களிடம் பெண்மையும்,மென்மையும் உண்டு. இவர்கள் ஓரளவு தடித்த தேகத்தினர்தாம். இதில் பிறந்த ஆண்கள் சுருட்டை முடியையும், பெண்கள் நீண்ட முடியையும் கொண்டவர்கள். இவர்கள் எவ்வளவு தூரம் வளைந்து கொடுக்கிறார்களோ, பல சமயங்களில் அதைவிடக் கடின சித்தராகவும் மாறிவிடுவார்கள்.

மனத்தினால் செய்யும் தொழில்களில் (கற்பனை, கவிதை, திட்டமிடுதல் போன்றவற்றில்) மிகவும் விருப்பமுடன் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் குணம் உள்ளதால், மக்களால் பெரிதும் விரும்பப்படுவார்கள். கற்பனை கலந்து கவர்ச்சியுடன் பேசுவதால் இவர்களுக்கு மக்களாதரவு உண்டு. பெரும்பாலோருக்கு முன்னோர்கள் சொத்துக்கள் இருக்கும். இந்த எண்ணின் ஆதிக்கம் குறைந்தவர்கள் வீண்பிடிவாதம் கொண்டு தங்கள் வாழ்க்கையைத் தாங்களே கெடுத்துக் கொள்வார்கள். நீதிமன்ற வழக்குகளிலும் சிக்கலைத் தந்துவிடும். முன்னோர் சொத்துக்களையும் இழக்கநேரிடும். மனதில் நிம்மதி இருக்காது. இவர்களின் வெற்றிக்கும் அல்லது தோல்விக்கும் ஒரு பெண்ணே காரணமாக இருப்பாள். காரணம் இவர்களுக்குச் சந்தேக குணம் அதிகம் உண்டு. இதனால் முழுமையாக யாரையும் நம்பாமல் திரும்பத் திரும்ப மற்றவர்களுடன் சந்தேகம் கொள்வதால்தான் இவர்களுக்கு எதிரிகள் உருவாகின்றனர்.

எதையும் பதற்றத்துடனும், ஒரு வித சோம்பலுடனும் அணுகும் குணத்தினையும் மாற்றிக்கொண்டால் இவர்கள் நிச்சயம் முன்னேறுவார்கள். முக்கிய காரியங்கள் எவற்றையும் சட்டென முடிக்காமல் காலத்தைக் கழித்துவிட்டு, பின்பு அவசர அவசரமாகச் செய்து முடிப்பார்கள். ஒரு மாதத்தின் இறுதியில்தான் அவசர அவசரமாக உட்கார்ந்து அந்தந்த மாதத்தின் வேலையை முடிப்பார்கள். தங்களது வாக்குறுதிகளை இவர்கள் காப்பாற்றுவது மிகவும் சிரமம். திருநெல்வேலி சென்றவுடன் அல்வா வாங்கி அனுப்புவதாகச் சொல்வார்கள். ஆனால் அனுப்ப மாட்டார்கள்.

சந்திர ஆதிக்கம் நன்முறையில் அமைந்திருந்தால் நல்ல திட்டங்கள் போட்டும் அவற்றில் வெற்றியும் அடைந்து விடுவார்கள். (உ+ம்) தேசத் தந்தை மகாத்மா காந்தி.

தங்களிடம் பல திறமைகள் இருந்தும் துணிந்து செயல்பட விருப்பப்பட மாட்டார்கள். இல்லாததைக் கற்பனை செய்து கொண்டு தங்களது வாழ்க்கையில் முடிவெடுக்க முடியாமல் திண்டாடுவார்கள். காலையில் சுறுசுறுப்புடன் தொடங்குவார்கள். ஆனால் மாலைக்குள் ஊக்கம் குறைந்து, சோர்ந்துவிடும் இயல்பினர்.

**பத்தாவது முறை தடுக்க விழுந்தவனிடம்**
**பூமித்தாய் முத்தமிட்டு சொன்னது,**
**மறந்துவிடாதே நீ ஒன்பது முறை**
**எழுந்து நின்றவன் என்று**

கவிஞர் கவிதாமணியின் இந்த புதுக்கவிதையின் வரிகளை மறக்காமல் கடைப்பிடித்தால் இவர்களது வாழ்வில் இன்பம் நிச்சயம்.

விதி எண் 2 ஆக வரும் அன்பர்கள் ஒரு வகையில் அதிர்ஷ்டசாலிகள். திருமணம் ஆனவுடன்தான் அம்பாளின் அனுக்கிரகத்திற்கு உட்படுவார்கள். வசதியுடன் மனைவி அல்லது மனைவி வந்தவுடன் வேலை, வாழ்க்கையில் முன்னேற்றம் ஆகியவை இந்த எண்காரர்களுக்கு ஏற்பட்டுவிடும். இவர்களும் பிறந்த ஊரை விட்டு வெளியூர் சென்று தொழில், வியாபாரம் அமைந்தால் தான் நல்ல தொழில் முன்னேற்றம், நல்ல இலாபங்கள் அடையலாம். இவர்களின் நடையில் எப்போதும் வேகம் உண்டு. செல்வத்தைச் சேர்ப்பதில் மிகவும் ஆசை உடையவர்கள். உலக சுகங்களை அனுபவிப்பதிலும் மிகவும் நாட்டம் உண்டு. அளவுக்கு அதிகமாகச் சாப்பிடும் குணம் உள்ளவர்கள். மனோவசியம் மற்றும் மந்திர தந்திரங்களிலும் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு. தாய்மையின் இயல்பான பாசம், குடும்பப்பற்று, தேசபக்தி, ஊர்ப்பற்று, தமிழ்ப்பற்று ஆகியவை உண்டு.

அளவுக்கு அதிகமாகச் சாப்பிடுபவர்களாதலால், வயிற்றுக் கோளாறுகள் அடிக்கடி ஏற்படும். சந்திரனின் ஆதிக்கம் குறையும்போது சிறுநீரகக் கோளர்றுகள், மனச்சோர்வு, மூல வியாதிகள் தோன்றும் இவர்களுக்கு நீர்த்தாகம் அதிகம் உண்டு. தண்ணீர், காபி, டீ மற்றும் குளிர்பானங்கள் ஆகியவற்றை மிகவும் விரும்புவார்கள். எனவே, இவர்கள் குடிப் பழக்கத்திற்கு மட்டும் ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதற்கு அடிமையாகி விடுவார்கள்.

**முக்கிய ஆலோசனைகள்**

பல அன்பர்கள் தங்களின் குறைகளை மறைத்துக்கொண்டு வாழ்கின்ற இரட்டைக் குணமுள்ளவர்களாக இருப்பார்கள். இவர்கள் வெளியே தைரியமுடையவர்களாகத் தோன்றினாலும் உள்ளத்தில் பெண்மையே (பயமே) மேலோங்கி நிற்கும். எனவே, இவர்கள் ஒரு வழிகாட்டியை தேர்ந்தெடுத்து அவரின் ஆலோசனைகளின் பேரில் காரியங்களைச் செய்து வரவேண்டும்.

திருமண வாழ்வில் அதிர்ஷ்டம் இருந்தாலும், தங்களுக்கு அதிர்ஷ்ட எண்களில் பிறந்த பெண்களை மணந்து கொண்டால்தான் இவர்களது வாழ்க்கை வளமாக இருக்கும். இல்லையெனில் குடும்பப் பிரச்சினைகள் கடைசிவரை இருந்துகொண்டே இருக்கும். இவர்களின் திருமணத்திற்கு 1, 3, 5, 6 ஆகிய எண்களில் பிறந்த பெண்கள் ஏற்றவர்கள். இருப்பினும் 7ஆந் திகதி பிறந்த பெண்ணே (பிறவி எண் (அ) கூட்டு எண்) மிகவும் சிறந்தவள்.

ஆனால் 8 அல்லது 9 எண் உடைய பெண்களை மட்டும் மணக்கவே கூடாது பின்பு வாழ்க்கையே நரகமாகிவிடும். 1ஆம் எண் பிறந்த பெண்ணும், இவர்களை அடக்கி ஆட்கொள்வாள். நல்ல வழித்துணையாக அமைவாள். எனவே மணம் புரிந்து கொள்ளலாம்.

இவர்கள் தங்களது திருமணங்களை 1, 10, 19, 28, 6, 15, 24, 7, 16 மற்றும் 25 திகதிகளும், மற்றும் 1, 6, 7 எண் கூட்டு எண்களாக வரும் தினங்களிலும் செய்து கொள்ள வேண்டும். இவர்கள் 1, 2, 4, 7 ஆகிய எண்களில் பிறந்த அன்பர்களை தொழிலில் கூட்டாளியாக ஏற்றுக் கொள்ளலாம். 5உம், 6உம் நடுத்தரமானதுதான் 9ஆம் எண்காரர்களையும், 8ஆம் எண்காரர்களையும் கூட்டாளிகளாகச் சேர்க்க வேண்டாம். இவர்களுக்கு 7, 5, 6, 1 ஆகிய நாட்களில் பிறந்தவர்கள் நண்பர்களாக அமைவார்கள்.

சந்திரன் யந்திரம் & சந்திரன் & 18

| | | |
|---|---|---|
| 7 | 2 | 9 |
| 8 | 6 | 4 |
| 3 | 10 | 5 |

சந்திரன் மந்திரம்
ததிசங்க துஷாராபம்
க்ஷீரோ தார்ணவ ஸம்பவம்
நாமம் சசிநம் ஸோமம்
சம்போர் மகுட பூஷணம்

**எண் 2 சிறப்பு பலன்கள்**

எண் 2 என்பது மனோகாரகனான சந்திரனுக்கு உரியதாகும். இந்த எண் பெண் தன்மை கொண்டது. எனவே, இந்த எண் ஆதிக்கத்தில் பிறப்பவர்களுக்கு மனோபலமும், கற்பனைத் திறனும் இயற்கையிலேயே உண்டு. எண்ணின் பலம் குறைந்தால் தன்னம்பிக்கை குறையும், மனதில் பல வீண் ஐயங்களும் ஏற்படும். உலகத்தின் கவிஞர்கள் இவர்களே.

தங்களின் காரியங்களை பல கோணங்களில் சிந்தித்த பின்பே தொடங்குவார்கள். இதனால் காரிய தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. இவர்களது மனத்தின் வேகத்திற்கு ஏற்றவாறு இவரது செயல்களில் வேகம் இருக்காது. எனவே, இவர்களைக் கற்பனைவாதிகள் என்று உலகம் சொல்கிறது. பேசிக் கொண்டிருப்பதில் இன்பம் காண்பவர்கள். எந்த ஒரு விடயத்தையும் பல கோணங்களில், உணர்ச்சிபூர்வமாகப் பேசுவார்கள். சிலர் மிகவும் கஞ்சத்தனமாகப் பணம் சேர்ப்பார்கள். வேறு சிலரோ பெரும் செலவாளிகளாக இருப்பார்கள். மனச்சோர்வு வராமல் இவர்கள் பார்த்துக் கொண்டால் செயல்களில் வெற்றி கிடைக்கும்.

எதிர்காலம் பற்றிய கற்பனைகள் இவர்களுக்கு உண்டு. புதிய புதிய கற்பனைகள் இவர்களுக்கு உண்டு. புதிய புதிய எண்ணங்களும், திட்டங்களும் இவர்களுக்குத் தோன்றும். இவர்கள் தண்ணீரால் (பஞ்சபூதம்) குறிக்கப்படுகிறார்கள். எனவே, பெரும் பிடிவாதம் கொண்ட மனிதாராகவோ, அல்லது பயந்து நடுங்கும் கோழைகளாகவோ இருப்பார்கள். எனவே, இவர்கள் தங்களது குறைகளை அறிந்து, அதை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். பெரும் ஓவியர்கள், கலைஞர்கள், பாடகர்கள், இலக்கியவாதிகள் எல்லாம் இந்த எண்ணில் பிறந்தவர்கள் தான்.

## 2 எண்ணுக்கு எதிலும் சந்தேகம்

அடுத்தவர்களைக் குற்றம் சொல்லும் குணத்தையும், வீண்டம்பப் பேச்சையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தங்களை விளம்பரப்படுத்திக் கொள்வதில் மிகவும் பிரியமுள்ளவர்கள். தண்ணீரில் சிலருக்குக் கண்டங்கள் ஏற்படலாம். எப்படியும் வெளியூர்த் தொடர்பு, வெளிநாட்டுத் தொடர்புகள் ஏற்பட்டு அவற்றின் மூலம் பல நன்மைகள் அடைவார்கள். அடுத்தவர்களுக்குப் பெரிதாக யோசனை சொல்வார்கள். ஆனால் தங்கள் அளவில் குறைவாகவே பயன்படுத்திக் கொள்வார்கள்.

தெய்வ பக்தியும் உண்டு. தங்களின் செயல்கள் மீதே இவர்களுக்கு பல ஐயங்கள் தோன்றும். சரியாகத்தான் செய்தோமா? இல்லையா? என்று பல தடவை குழம்புவார்கள். இவர்கள் உணர்ச்சி மயமானவர்கள். கோபம், பிடிவாதம், ஆத்திரம் போன்ற குணங்கள் உண்டு. இக்குணங்களைத் தவிர்த்துக் கொண்டால்தான் மக்களின் மத்தியில் செல்வாக்கு அடையலாம் இந்த எண்காரர்களுக்கு குழந்தை பாக்கியம் நிறைய உண்டு. குறிப்பாக பெண் குழந்தைகள் அதிகம் இருக்கும். (தொடரும்)

# இலங்கையிலிருந்து வேறு நாடுகளுக்கும் பயணிகள் கப்பல் சேவை நடத்தப்படும்

## பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவிப்பு



இந்தியாவிலிருந்து பயணிகள் கப்பல் சேவை இலங்கைக்கு ஆரம்பிக்கப்பட்டதைப் போன்று எதிர்காலத்தில் இலங்கையிலிருந்து ஏனைய நாடுகளுக்குப் பயணிகள் கப்பல் சேவைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கொழும்புத் துறைமுகத்திற்கான பயணிகள் கப்பல் சேவை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

கப்பலையும், பயணிகளையும் வரவேற்கும் நிகழ்வு கப்பலிலுள்ள வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இங்கு பிரதியமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே 40 வருட வரலாற்றில் பயணிகள் கப்பல் சேவை நடைபெற்று வந்தது. எமது நாட்டில் உருவான பயங்கரவாத யுத்தம் காரணமாக 30 வருட காலம் இந்த பயணிகள் கப்பல் சேவையை நிறுத்த வேண்டிய நிலைமை உருவானது.

ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் தீர்க்கதரிசன நடவடிக்கைகளால் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டது. யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட்டது.

இதன் பின்னர் ஜனாதிபதி இந்தியாவிற்கு விஜயம் செய்து பயணிகள் கப்பல் சேவைகள் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்குடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டார். இதற்கமைய முதலாவது கப்பல் சேவை மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாற்பது வருடகால வரலாற்றிற்கு உயிர் கொடுக்கப்பட்டுள்ளது. இது வரலாற்றில் பொன் எழுத்துக்களால் எழுதக்கூடிய நாளாகும். எதிர்காலத்தில் இலங்கையில் இருந்து வேறு நாடுகளுக்கு பயணிகள் கப்பல் சேவைகளை நடத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு குறைந்த கட்டணத்தில் அன்று படகுச் சேவைகள் நடத்தப்பட்டன. இன்று மூன்று நட்சத்திர ஹோட்டலைப் போன்று சொகுசு கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ- 2)

# விலங்கு விசர் நோய் தடுப்பூசியேற்றல்

(பூநகரி)

பூநகரி பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட ஆறு கிராமங்களில் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய நாளை வெள்ளிக்கிழமை 9 மணி தொடக்கம் வேருவில் கிராமத்தில் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-84)

# பல்கலை பேராசிரியர்களின் சம்பள பிரச்சினைக்கு உடனடி தீர்வு அவசியம்

## ஐ.தே.க.வலியுறுத்து

பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு காணாது அதனை காலம் தாழ்த்தி வருவதானது உயர் தர மாணவர்களின் பரீட்சைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தப் போகின்றது.

எனவே, பிரச்சினையை நீடித்துக் கொண்டிருக்காது தீர்வு காணுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே [illegible]க்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் கூறுகையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பள விவகாரத்துக்கு இதுவரையில் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. இது தொடர்பில் பேராசிரியர்கள் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ந்து வருகின்றனர்.

இதுவிடயத்தில் உரிய தீர்வுகள் பெற்றுத் தரப்படும் என்று அரசு தரப்பிலிருந்து உறுதி அளிக்கப்பட்டது. சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கென வரவு-செலவு திட்டத்தில் திட்டம் உள்வாங்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது. அது மட்டுமல்லாது உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவும் பல்வேறு உறுதிமொழிகளை வழங்கியிருந்தார். எனினும் எதுவும் நடைபெறவில்லை.

இந்நிலையில் தமது உரிமைகள் நிறைவேற்றப்படவில்லையெனில் , அது உயர்தர மாணவர்களின் பரீட்சையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அறிவித்துள்ளனர். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் அது பாரிய பிரச்சினையை தோற்றுவிப்பது மட்டுமல்லாது மாணவர்களே பாதிக்கப்படும் நிலை உருவாகும்.

எனவே, பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பள விவகாரத்துக்கு அரசு உடனடியாக தீர்வுகளை எட்டவேண்டும். இதனை இன்னும் இரண்டு, மூன்று வருடங்களுக்கு இழுத்துச் செல்ல வேண்டாம் என்றார். (ஸ்ரீ-2)

# பல்கலைக்கழக மாணவர்களுக்கான இரண்டாம் கட்ட தலைமைத்துவ பயிற்சி

## இன்று ஆரம்பம்

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டாம் தொகுதி மாணவர்களுக்கான தலைமைத்துவப் பண்புகள் மற்றும் உடன்பாட்டுச் சிந்தனை மேம்பாட்டுக்கான 3 வார காலப் பயிற்சி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சியில் 10 ஆயிரத்து 225 பேர் பங்குகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. 28இடங்களில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களிடையே காணப்படுகின்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை வகுப்பு மாணவர் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி ஓர் அர்த்தபுஷ்டியான வினைத்திறனுள்ளவர்களாக மாற்றுவதன் மூலம் இந்த மாணவர்களின் சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதே இந்தப் பயிற்சியின் நோக்கம் என கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கனடாவில் 4 இலங்கைத் தமிழர்கள் கைது

(கொழும்பு)

கடந்த 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 ஆம் திகதி கனடாவிற்கு 76 அகதிகளுடன் சென்ற ஓசன் லேடி என்ற கப்பலை செலுத்திவந்த நால்வர் நேற்று கனடாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பலிற்குப் பொறுப்பாக இருந்த விக்னராஜா தேவராஜா மற்றும் கப்பலின் கப்டனான கமல்ராஜ் கந்தசாமி மற்றும் இயந்திரவியாளர்களான பிரான்சிஸ் மனோகரன் மற்றும் ஜெயச்சந்திரன் கனகராஜா ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர்.


கனடாவின் கன்சவேட்டிங் கட்சி அரசாங்கம் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் நடைபெறும் முதலாவது சம்பவம் இதுவாகும். அத்தோடு இக்கப்பல் விவகாரம் தொடர்பாக இடம்பெறும் முதலாவது கைதும் இதுவாகும்.


இக் கடத்தலுக்கும் விடுதலைப் புலிகளிற்கும் தொடர்பு உள்ளதாகவே கருதப்படுகின்ற போதும் இது நிரூபிக்கப்படவில்லை. நேற்று இடம்பெற்ற கைதுக்கு மேலாக மேலும் பலர் விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


இக் கடத்தலில் ஈடுபட்டவர்கள் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் ஆயுள் தண்டனை வரையான தண்டிப்புக்கு இவர்கள் ஆளாகக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிறிதொரு கப்பலான சன்சி என்ற கப்பலில் வருகை தந்த 492 பயணிகளிடமும் பெறப்பட்ட மீதிப்பணத்திற்கான ஒப்பந்த ஆவணங்கள் கனேடிய பொலிஸாரிடம் நோர்வே பொலிஸாரால் கையளிக்கப்பட்டுள்ள நிகழ்வு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

(ஸ்ரீ-2)







கிளிநொச்சி றோயல் முன்பள்ளியின் 21 ஆம் ஆண்டு நிறைவையொட்டி விளையாட்டு போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசா உரையாற்றுவதையும் ஓய்வு பெற்றுச் செல்லவிருக்கும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முன்பள்ளி ஆசிரியர் ஒருவர் நினைவுப் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-பூநகரி செய்தியாளர்)*

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

(ஆ) நீதிச் சட்டத்தின் குறைபாடுகள்

356. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போது நேர்ந்ததாக நம்பகமாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள முக்கிய நடைமுறை அம்சங்களை மேவும் பல குற்றங்கள் இலங்கை குற்றவியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆயினும் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் நடைபெற்றிருக்கக்கூடிய பல மீறல்களைப் புலனாய்வு செய்து வழக்குத் தொடர்வதற்கான சட்டமா அதிபரின் சக்தியைச் சிக்கலாக்கும் பல வடிவமைப்புக் குறைபாடுகள் இலங்கைச் சட்டத்தில் காணப்படுகின்றன.

(டி) உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றமாகக் கணிக்கப்படும் தரப்பினர் நடத்தைக்கு முற்றிலிலும் மாறாக, உள்நாட்டு ஆயுதந்தாங்கிய மோதலின் போதான போர்க்குற்றங்கள், (டிடி) ஒரு குற்றத்தைப் புரியுமாறு கட்டளையிடுவது தொடர்பான இராணுவக் கட்டளைத் தளபதிகளின் அல்லது சிவிலியன்உயர்அதிகாரிகளின் பொறுப்புப்பற்றிய தெளிவான ஏற்பாடுகள், மற்றும் (டிடிடி) பதவியில் தாழ்ந்தவர்கள் ஈடுபடும் குற்றங்களை தடுப்பது அல்லது அவற்றுக்கான தண்டனை வழங்குவது தொடர்பான இராணுவக் கட்டளைத் தளபதிகள் அல்லது சிவிலியன் மேற்பார்வையாளர்களின் பொறுப்பு வழக்கு மரபுப்படி கட்டளைப்பீட அல்லது மேற்பார்வைப் பொறுப்பு, போன்றவற்றுக்கான தெளிவான ஏற்பாடுகளை இலங்கைச் சட்டம் வழங்கவில்லை.

357. யுத்தத்தின் இறுதிக்கட்டங்களை உள்ளிட்ட இலங்கையில்



காணாமற்போன அதிக எண்ணிக்கையினரைக் குறிப்பாகக் கருத்திற்கொண்டு, வலுக்கட்டாயமாக காணாமற் போதலை குற்றமெனக் குறிப்பிடாதது மேலுமொரு வடிவமைப்புக் குறைபாடுகளாகும்.

கடந்தகாலங்களில், இத்தகைய குற்றங்களுக்கு சாதாரண குற்றவியல் ஏற்பாடுகளை நாடவேண்டிய தேவையை இந்நிலை ஏற்படுத்தியது என்பதோடு, பொதுவான சட்டத்தின்கீழான குற்றமொன்றுக்கு வழக்குத்தாக்கல்செய்வதற்கு போதிய சாட்சியங்களால் நிறுவப்பட்ட தொன்றாக அதனை எடுத்துக் காட்டுவது சிரமமாகிறது. கிடைக்கக்கூடிய சாட்சியங்களின்மூலம் வலுக்கட்டாயமான காணாமற் போதல் ஒன்றுக்கு நிறுவகப் பொறுப்பு தெளிவாக இருந்து, தனிநபர் பொறுப்பினை நிரூபிப்பது கஷ்டமாக இருந்தபோதிலும், அரச பொறுப்பினைக் கண்டுபிடிப்பதற்கான தெளிவான சட்டப்பொறித் தொகுதியொன்றையும் காணக்கூடியதாக இல்லை.

358. மேலும், போர்க்குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களுக்காக பயனுறு பதிலளிப்பதற்கான திறனை இலங்கைக் குற்றவியல் நீதி அமைப்பின் பலவீனம் சிக்கலாக்குகிறது. முதலில் ஆயுதப்படையினருக்கு மட்டுப்படுத்தப்படாமல் சட்டத்தை அமுலாக்கும் முகவர்கள் அனைத்திலும் பரந்திருக்கும், பாரிய அளவிலான சாட்சியங்களை அச்சுறுத்தும் நிலையிலும்கூட பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் எதுவும் காணப்படவில்லை. தமக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்ட பின்னரும் சித்திரவதை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட காவற்துறை அதிகாரிகள் தம் பதவிகளில் தொடர்ந்து இருந்து, அவ்வாறாக வழக்கு நடை பெறும்வரை சாட்சிகளை அச்சுறுத்தவும் சிலவேளைகளில் கொலை செய்யவும் தம் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பிரயோகிக்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக அனேகமாக எல்.ரி.ரி.ஈ.யுடன் தொடர்பு உண்டு என்று சந்தேகிக்கப்படுபவர்களுக்கு எதிராகப்பிரயோகிக்கப்படும், சர்வதேச சட்டத்துக்கு முரணான பயங்கரவாத தடைச்சட்டம்(பி.ஏ சட்டம்),குற்ற ஒப்புதல் ஒன்று பலாத்காரமாகப் பெறப்பட்டது என்பதை நிரூபிக்கும் பொறுப்பைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள்மீது சுமத்துகிறதால், அதிகாரிகள் தவறான வழியில் கேள்விகளைக் கேட்டு விசாரணை செய்யும் சாத்தியக்கூறினை அது அதிகரிக்கிறது.

இ) நீதிமன்றங்கள்


359. குறிப்பாக ஆயுதம் தாங்கிய மோதலின் சூழ்நிலைப்பொருத்தத்தில் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட பாரதூரமான சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள் தொடர்பாக அண்மையில் இலங்கையின் குற்றவியல் நீதிமன்றங்கள் மேற்கொண்ட பூகோளரீதியிலான அணுகுமுறையைப் பற்றிய பகிரங்கமாக கிடைக்கக்கூடிய தரவுகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளன. அதன்விளைவாக மேலும் விரிவான உருவமைப்பை ஊகித்துக் கொள்ளக்கூடிய விதத்தில் யுத்தத்தின்கடைசிக் கட்டங்கள் பற்றிய அதன் பகுப்பாய்வுக்கு நேரடியாகச் சம்பந்தப்பட்ட இரு பாரிய மரபுவழி சார்ந்த ஆதங்கங்களையும் குழு மதிப்பீடு செய்கிறது. இது சித்திரவதை மற்றும் வலுக்கட்டாயமான காணாமற் போதல்கள் தொடர்பான குற்றங்கள் பற்றிய இலங்கை நீதிமன்றகளின் செயற்பாட்டை குறிப்பதாகவுள்ளன.

சித்திரவதை, காணாமற்போதல் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக பாரபட்சமின்றி புலனாய்வு செய்யவில்லை.

360. இலங்கையில் வழக்குக்கு முந்திய மற்றும் வழக்கு நடைமுறை ஆகிவற்றை உள்ளிட்ட நீதியின் செயற்பாட்டின் சகல கட்டங்களிலும் தாமதம் ஏற்படுவது இயல்பானதாகவே உள்ளதோடு, மனித உரிமைகள் மீறல் வழக்குகளுக்கு அவை தனித்தன்மை வாய்ந்தனவல்ல.

சுமார் இரண்டு வருடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடிய புலனாய்வுகள், மற்றும் புகார்செய்பவர்களுக்கு எதிரான அச்சறுத்தல்கள் அத்துடன் சித்திரவதை பற்றிய குற்றச்சாட்டுகள், குற்றவியல் நீதிச்சட்டத்தின் நிஜமான மற்றும் கருதப்படும் நியாயத்தை பெருதும் பாதித்துள்ளன.

நியாயமான தொருகாலப் பகுதிக்குள் வழக்கை நடத்துவதற்கான தெளிவானதொரு உரிமை இலங்கையின் சட்டத்தில் இல்லை என்பதோடு பொருத்தமற்ற காலதாமதம் பற்றி அரசியலமைப்பிலோ அல்லது குற்றவியல் நீதிச் சட்டங்களிலோ தெளிவான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. முறைசார்ந்த நடைமுறை விதிகளுக்கு புறம்பாகச் செயற்படுவதும் பொதுவானதொரு அம்சமாகத் தென்படுகிறது. கடத்தல், சட்ட விரோதமாகத்தடுத்து வைத்தல், அல்லது சித்திரவதைக்குற்றங்கள்மீது அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வழக்குகளில் அதிகமானவை திருப்திகரமான சாட்சியமில்லாமை மற்றும் சாட்சிகள் கிடைக்காமை காரணங்களாக தீர்ப்பின்றி முடிவடைந்துள்ளன.



கடந்த ஆண்டுகளில் இலங்கையில் புரியப்பட்ட பாரிய குற்றங்களுக்காக குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்ட விகிதாசாரம் மிகக்குறைவான, 4சதவீதமே என 2004 ஆம் ஆண்டின் அறிக்கையொன்று இனங்கண்டுள்ளதோடு இத்துறையில் ஒரு முன்னேற்றத்தையும் குழு காணவில்லை. குற்றவாளனியென ஆக்கபூர்வமாக தீர்ப்பளிக்கப்பட்ட வழக்குகளிலும் இழப்பீடுவழங்குவதில் நீதிமன்றங்கள் தயக்கம் காட்டியுள்ளன.

361. அரச அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு மற்றும் கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவாக்கும் விதத்தில் நடத்தப்படுவது அல்லது தண்டனைக்கு உள்ளாக்கப்படுவது பற்றிய அறிக்கைகள் தொடர்ச்சியாகவும் பரவலாகவும் உள்ளன. (உடனடியாக கொலைத்தண்டனையை நிறைவேற்றுதலுடன்) காவல்துறையில் தடுத்து வைக்கப்பபட்ட நிலையில ஏற்படும் மரணத்துக்கான இரண்டு முக்கிய காரணிகளுள் சித்திரவதையும் ஒன்று எனக்காணப்பட்டுள்ளதோடு தடுப்புக்காவலில் நேரும் அதிகமான மரணங்கள் தனியானதொரு அதிகாரியின் வரம்பு கடந்த செயலுக்கு அப்பால் அதிகாரிகள் அன்றாடம் தாம் ஈடுபடும் செயற்பாடு காரணமாகவே நிகழ்கிறது என்பதோடு அது விசாரணை செய்யும்போது நேரும் ஒரு விடயம் எனச்சாதாரணமாக கருதப்படுகிறது. சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளினால் நிகழும் குற்றம் சாட்டப்பட்ட பரவலான சித்திரவதை, மோசடி நடத்துதல் மற்றும் காணாமல் போதல்கள் ஆகியவற்றை அரசாங்கம் உடனடியாக மற்றும் பாரபட்சமின்றிப் புலனாய்வு செய்யவில்லை. சித்திரவதை பற்றிய விடயங்கள் தொடர்பாக பதவி நிலையிலான பயனுறு புலனாய்வுப் பொறித் தொகுதி இல்லாதது குறிப்பானதொரு சிக்கலாகவுள்ளதோடு அது சர்வதேச தரங்களையும் நிறைவு செய்யவில்லை.

362. சித்திரவதையை தண்டனைக்குரிய குற்றம் என வகைப்படுத்தும் 1994 ஆம் ஆண்டின் கெட் சட்டம் ஆமுலாக்கப்பட்டதும் மிகப்பாரிய குற்றங்கள் தொடர்பில் அவை எவ்வாறு கையாளப்பட்டன என்பதற்கான உதாரணத்தை எடுத்துக் கொண்டால், சட்டமாஅதிபர் 34 குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்துள்ளதோடு, இதுவரை 3 குற்றவாளியென தீர்ப்பும் 8 விடுதலை செய்தல்களும் நடைபெற்றுள்ளன பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்குமேல் எந்த அதிகாரிக்கு எதிராகவும் சித்திரவதை தொடர்பான வழக்கினை சட்டமா அதிபர் தொடரவில்லை.

வலுக்கட்டாயமான காணமாற் போதல்கள், (கடத்தல் மற்றும் பலவந்தமாக எடுத்துச்செல்லல் போன்ற குறைந்த பாரதூரமான குற்றங்களின் கீழ்பொதுவாக குற்றம் சாட்டப்பட்ட) விடயங்களில் குற்றவாளியெனக்காணும் விகிதாசாரம் மிகக்குறைவாகவே உள்ளது. என்பதைக் கிடைக்கக்கூடிய தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. புகாரினைத் தொகுப்பதில் நேர்ந்த தாமதங்கள் மற்றும் அல்லது பிழையாகக் குற்றப் பத்திரிகையை தாக்கல்செய்தல் போன்ற துறைநுட்ப வரையறைகளைப் போன்று தென்படும் நோக்கங்களுக்காக நீதிமன்றங்கள் இவ்வழக்குகளை தள்ளுபடி செய்ய விளைகின்றன.

பிந்திய விடயத்தில், சட்டமா அதிபருக்கும் மேல்நீதி மன்றத்துக்கும் அத்தகைய குற்றப் பத்திரிகைகளை

**தமிழாக்கம் தொடர் 45**

திருத்துவதற்கான அதிகாரம் இருந்த போதிலும் பல வழிகளில் அவ்வதிகாரம் அதிகார பூர்வமாக பாவிக்கப்படவில்லை. குற்றவாளியென காணப்பட்ட சந்தர்ப்பங்களில் தண்டனை விதித்தல் சம்பந்தப்பட்ட விடயத்தின் பாரதூரமான தன்மையை நோக்கு மிடத்து மிகவும் கடுமையற்றதாகவே மேற்கொள்ளப்படுகிறது.

(தொடரும்)



உலக சுற்றாடல் தினமாகிய ஜூன் மாதம் 5 ஆம் திகதியன்று ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையினர் சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கில் தமது வாடிக்கையாளர்களுக்கு பயன்தரு மரங்களை வழங்கினர். இந்நிகழ்வில் வடமாகாண பிராந்திய முகாமையாளர் ரி. ஜெயராஜசிங்கம் வாடிக்கையாளரான தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினத்திற்கு மரக்கன்று வழங்குவதையும் வங்கி முகாமையாளர் ச.அ. ஆறுமுகன் கொக்குவில் இந்துக் கல்லூரியில் மரக்கன்றுகளை நடுவதையும் நூல் நிலையத்திற்கு இலவச பாடநூல்கள் அன்ப ளிப்பாக வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட தமிழர்களை நாடுகடத்த வேண்டாம்

## சனல் 4 தொலைக்காட்சி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து லண்டன் வந்து அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட தமிழர்கள் நாடுகடத்தப்படுதல் நிறுத்தப்பட வேண்டும் என்று சனல் 4 தொலைக்காட்சி நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு இந்த வாரம் இலங்கைத் தமிழர்கள் பலர் நாடுகடத்தப்படவுள்ளனர் எனவும் அவர்கள் அனைவரும் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இவர்கள் நாடுகடத்தப்பட்டால் இலங்கையில் துன்புறுத்தப்படலாம் என சனல் 4 தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இதேநேரம் பிரித்தானிய குடிவரவு திணைக்களம் தமிழர்களின் இரகசியங்களை இலங்கை அரசிற்கு கசிய விட்டுள்ளதாகவும் அத்தொலைக்காட்சி செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# மூவாயிரத்து 497 பேர் மாத்திரமே புனர்வாழ்வு நிலையங்களில்

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் மூவாயித்து 497 பேர் மாத்திரமே தற்போது புனர்வாழ்வு நிலையங்களில் இருப்பதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் பொலநறுவை ஆகிய பிரதேசங்களில் உள்ள புனர்வாழ்வு நிலையங்களில் இவர்களுக்கான புனர்வாழ்வு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வழிப்பதற்கான நடவடிக்கை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

தற்போது புனர்வாழ்வு நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கான தொழிற்பயிற்சி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வவுனியாவில் ஐந்து புனர்வாழ்வு நிலையத்திலும் பொலநறுவையில் இரண்டு நிலையங்களிலும் 106 முன்னாள் பெண் போராளிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களையும் கட்டம் கட்டமாக சமூகமயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மீண்டும் சமூகத்தில் இணைந்து நற்பிரஜைகளாக வாழ்வதற்கு தேவையான பயிற்சிகள் அனைத்தும் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

குடும்ப உறுப்பினர்களுடன் இணைக்கப்படுகிற முன்னாள் போராளிகள் சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கு ஏதாவது கடன் உதவிகளை பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# இலங்கைக்கு ஆதரவளிப்பதை மலேசியா மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## மனித உரிமைகள் அமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு ஆதரவளிப்பதை மலேசியா மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும் அதேநேரம் ஏனைய நாடுகளும் இலங்கையின் உள்ளூர் பிரச்சினையில் தலையீடு செய்யக் கூடாது என்றும் மலேசியாவில் மனித உரிமைகளை மேம்படுத்தும் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கையின்படி இலங்கையின் இறுதிப்போரின் போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன.

எனவே, அது தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று அவ் அமைப்பின் தலைவர் சிமோன் சிபைன் கோரியுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் இலங்கைக்கு எதிராக ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் குற்றங்கள் சுமத்தப்பட்ட போது அது உள்ளூர் பிரச்சினை என்றும்கூறி மலேசியாவின் ஆதரவுடன் குற்றச்சாட்டு நிராகரிக்கப்பட்டது.

எனினும் தற்போது இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளமையால் மலேசியா தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டும்.

தென்னாபிரிக்காவில் மனித உரிமைகள் மீறப்பட்ட போது அதற்கு எதிராக மலேசியா குரல் கொடுத்ததை போன்று இலங்கை விடயத்திலும் நடந்துகொள்ளவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

(ஸ்ரீ-2)

# வீதியோரத்தில் குப்பைகளை கொட்டியவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் வீதியோரத்தில் குப்பைகளை கொட்டிய குற்றச்சாட்டின் பேரில் நபர் ஒருவருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதித்து யாழ். நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மேற்குறித்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபர் யாழ்ப்பாணப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்று முன்தினம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிவான் அ.பிறேமசங்கர் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார்.

(ஸ்ரீ-3)

# கும்பாபிஷேகம்

முல்லைத்தீவு கள்ளப்பாடு அருள் மிகு சிவசக்தி நாகதம்பிரான் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.02 மணிமுதல் 11.50 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் பிரதிஸ்டா பிரதமகுரு சிவஸ்ரீ க.சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாவதுடன் மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து கிராமசாந்தி, வாஸ்துசாந்தி முதலானவையும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

மேலும் தொடர்ந்து10 தினங்கள் மண்டலாபிஷேகமும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை வருடாந்த பொங்கல் உற்சவமும் நடைபெறுமென ஆலய பரிபாலனசபை தெரிவித்துள்ளது.

* * * *

யாழ். கந்தர்மடம் சிவ உதயநாக பூஷணி அம்மன் கோயில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.02 மணி முதல் 11.50 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 12 மணி வரை நடைபெறும்.

(ஸ்ரீ)

# ரிசானா நௌபீக் விடுதலை செய்யப்படக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள இலங்கைப் பணிப்பெண் ரிசானா நௌபீக் விடுதலை செய்யப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

சிசுவொன்றை கொலை செய்த குற்றத்திற்காக சவுதி நீதிமன்றம் ரிசானாவிற்கு மரண தண்டனை விதித்திருந்தது.

கொலை செய்யப்பட்ட சிசுவின் பெற்றோரில் ஒருவர் ரிசானாவிற்கு மன்னிப்பு வழங்கியுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். ரிசானாவின் மரண தண்டனையை அந் நாட்டு மன்னர் ஒத்தி வைத்திருந்தார்.

கொலை செய்யப்பட்ட சிசுவின் பெற்றோர் இருவரும் ரிசானாவிற்கு மன்னிப்பு வழங்கினால் விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். பெற்றோர் மன்னிப்பு வழங்கும் பட்சத்தில் குறித்த நட்டஈட்டுத் தொகையை வழங்கத் தயார் என் இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

ரிசானாவின் குடும்பத்தாருக்கு உதவிகளை வழங்குவதற்கு தயார் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)




# பெற்றோர் தினவிழா

யாழ்/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலையின் பெற்றோர் தினவிழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் சூ.நோபேட் உதயகுமார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக வணிகபீட சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் கற்கைகள் தலைவர் இ.ரட்ணம், யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட தேசிய பாடசாலை ஆசிரியர் திருமதி றெஜி பிரான்ஸிஸ்கா ரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசியுரையினை மாரீசன்கூடல் பங்குத் தந்தை அருட்பணி எம்.எம்.எச். ஞானேந்திரன் அடிகளார் வழங்கவுள்ளார்.

(ஸ்ரீ)

யாழ். நீராவியடிப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சுவாமி தேரில் ஆரோகணித்து வருவதை படங்களில் காணலாம்.

# அரசுக்கு எதிராக இராணுவத்தை திசை திருப்புகிறது ஜே.வி.பி.

## லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக இராணுவத்தினரை திசை திருப்பும் முனைப்புக்களில் ஜே.வி.பி. ஈடுபட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஸ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் இலாபங்களை ஈட்டும் நோக்கில் இவ்வாறான சதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

படைவீரர்களை தங்களது பிள்ளைளைப் போன்று பாதுகாக்கும் அரசாங்கமாக தற்போதைய அரசாங்கம் திகழ்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படைவீரர்களுக்காக அரசாங்கம் முன்னெடுத்து வரும் நலத்திட்டங்களை எவராலும் தடுக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

படைவீரர் ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பில் ஜே.வி.பியினர் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மாவிட்டபுரத்தில் உட்கட்டுமான வேலைத்திட்டங்கள் ஆரம்பித்து வைப்பு

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மாவிட்டபுரம் பகுதியில் கடந்த 21 வருடங்களின் பின் அண்மையில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

இப்பகுதிகளில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உட்கட்டுமான வேலைத்திட்டங்கள் அனைத்தும் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப் பட்டன.

இதற்கமைய 28 வீதிகள் செப்பனிடப்படுவதற்கான ஆரம்ப வேலைகள், 100 இலட்சம் ரூபா செலவில் 2 பாடசாலைகள் புனரமைப்பு வேலைகள், 2 வைத்தியசாலைகள் புனரமைப்பு வேலைகள், 2 ஆயிரம் கிணறுகள் துப்புரவு செய்யும் பணி என்பன நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தெல்லிப்பழை பிரதேச செயலர் முரளிதரன், திணைக்கள அதிகாரிகள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பொது மக்களின் தேவைகளும் கேட்டறியப்பட்டன.

(ஸ்ரீ-6)

# ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்த பெண்ணுக்கு 42 ஆண்டுகள் சிறைத்தண்டனை

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை செய்த பெண் ஒருவருக்கு 42 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் பத்மன் சூரசேனவினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொன் நிதர்ஷனா ரந்திமா என்ற பெண்ணுக்கே இவ்வாறு 42 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1.68 கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டிருந்தன.

கடந்த 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இரவு 11 மணியளவில் குறித்த பெண்ணை பொலிஸார் கைது செய்திருந்ததாகவும் போதைப் பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடர்ந்திருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக 20 ஆண்டு கால சிறைத்தண்டனையும் போதைப் பொருளை விற்பனை செய்த குற்றத்திற்காக மேலும் 20 ஆண்டு கால சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

போதைப் பொருளை வைத்திருந்தமைக்காக இரண்டு இலட்ச ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாகவும் இந்த அபராதத்தை செலுத்தத் தவறிய காரணத்தினால் மேலதிகமாக இரண்டு ஆண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# தற்காலிக அடையாள அட்டைகளை புதுப்பிக்குமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

தேர்தலில் வாக்களிப்பதற்காக ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டைகளின் செல்லுபடி தன்மையை எதிர் வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பொதுத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஆகியவற்றின் போது தற்காலிக அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

தேர்தல்கள் செயலகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டைகள் இல்லாதவர்களுக்கு இந்த தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருந்தன.

ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளின் கால எல்லை நிறைவடைந்துள்ளதால் அவற்றை தற்போது புதுப்பிக்க வேண்டுமென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ பீ.சுமனசிறி தெரிவித்தார்.

இந்த தற்காலிக அடையாள அட்டைகள் புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை கிராம அலுவலர்கள் ஊடாக அடுத்த வாரத்திற்குள் ஆரம்பிக்க தேர்தல்கள் செயலகம் திட்டமிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.06 16

- ★ *1745*- பிரித்தானியர் கேப் பிறெட்டன் தீவை பிரெஞ்சுப் படைகளிடம் இருந்து கைப்பற்றினர். இது தற்போது கனடாவின் ஒரு பகுதியாகும்.
- ★ *1779*- ஸ்பெயின் பெரிய பிரித்தானியா மீது போரை அறிவித்தது. கிப்ரால்ட்டர் மீதான முற்றுகை ஆரம்பமானது.
- ★ *1819*- குஜராத்தில் இடம்பெற்ற 8.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- ★ *1883*- இங்கிலாந்தில் விக்டோரியா அரங்கில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 183 சிறுவர்கள் கொல்லப்பட்டனர்.
- ★ *1897*- ஹவாய்க் குடியரசை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.
- ★ *1911*- விஸ்கொன்சின் மாநிலத்தில் 772 கிராம் விண்கல் வீழ்ந்ததில் களஞ்சியம் ஒன்று சேதமடைந்தது.
- ★ *1940*- லித்துவேனியாவில் கம்யூனிச ஆட்சி உருவானது.
- ★ *1963*- உலகின் முதலாவது பெண் விண்வெளி வீரர் ரஷ்யாவின் வலன்டீனா டெரெஷ்கோவா வஸ்தோக் 6 விண்கலத்தில் பயணமானார்.
- ★ *1976*- தென்னாபிரிக்காவில் சுவெட்டோ வில் 15 ஆயிரம் கறுப்பின மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 566 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- ★ *1964*- லியோனிட் பிரெஷ்னேவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்.
- ★ *1983*- யூரி அந்திரோப்பொவ் சோவியத் ஒன்றியத்தின் ஜனாதிபதியானார்.
- ★ *1994*- சீன விமானம் TU- 154 புறப்பட்டுப் 10 நிமிடங்களில் வெடித்ததில் 160 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்பு

- ★ *1971*- டுபாக் ஷகூர், அமெரிக்காவின் ராப் இசைக் கலைஞர்

இறப்பு

- ★ *1925*- சித்தரஞ்சன் தாஸ், இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1870)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம் விஷம்



## ஆன்மீகம் 24

"'உங்கள் கலாசாரம், அமைதி, ஆனந்தம் என்று வெளியில்தான் பேசுகிறது. அப்புறம் ஏன் உங்கள் கடவுள்கள் இத்தனை ஆயுதங்களைத் தாங்கி நிற்கிறார்கள்?' என்று என் நண்பன் கேலியாகக் கேட்கிறானே?"

நம் கலாசாரத்தில் கடவுள்கள் தாம் ஆயுதங்கள் தாங்கி நிற்கிறார்கள். மனிதர்கள் நிராயுதபாணியாகத்தான் இருக்கிறார்கள்.

இன்றைக்கு வளர்ந்துவரும் நாடுகள் எல்லாமே ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. உலகின் மிகப்பெரிய வணிகமே ஆயுதங்கள் தயாரித்து, விற்பதுதான். எந்த ஒரு தேசத்திலும் ஆயுதங்களுக்காக அரசாங்கங்கள் பெரும் நிதி ஒதுக்குகின்றன. உங்களிடம் ஆயுதங்கள் இருந்தால்தான், அடுத்த தேசம் உங்களை அமைதியாக இருக்க விடும். நிராயுதபாணியாகவே இருந்தால், எல்லோரும் ஏறிமிதித்து விடுவார்கள். இதை நம்மவர்கள் முன்பே அறிந்திருந்தார்கள்.

உலகில் உள்ளவர்கள் அனைவரும் விழிப்புணர்வுடனும் சகோதர உணர்வுடனும் வாழத்தொடங்கிவிட்டால், ஆயுதங்களுக்கு அவசியமே இராது. ஆனால் அந்தப் பக்குவத்தை உலகம் இன்னும் பெறவில்லையே?

பொதுவாகவே மனிதர்கள் நலனும் பாதுகாப்பும் நாடித்தான் கடவுளிடம் போகிறார்கள். எதிரிகளிடமிருந்து பாதுகாப்புத் தரக்கூடிய கடவுள் ஆயுதங்கள் ஏந்தியிருப்பது அவசியம் என்று மனிதன் நினைத்திருக்கலாம் அல்லவா? தவிர தீமைகளை ஒழிக்கும் வல்லமை உள்ளவர் கடவுள் என்பதற்கான குறியீடுதான் அவன் கைகளில் உள்ள ஆயுதங்கள்.!

"அப்படியானால் நம்காலாசாரம் வன்முறையைத்தான் நம்பகிறதா?"

இல்லை. அதே கடவுள்கள் வேறு கைகளில் தாமரைமலர்களையும் அருள்வழங்கும் முத்திரைகளையும் கொண்டிருப்பதை நீங்கள் கவனிக்கவில்லையா?

லிடியா தேசத்து அரசன் க்ரோசஸ், பாரசீகத்தை தாக்க முடிவு செய்தான். தெய்வ சந்நிதியில் ஆரூடம் கேட்டான்.

"உன்னால் ஒரு பெரிய சாம்ராஜ்யம் அழியப்போகிறது!" என்று அருள்வாக்குக் கிடைத்தது.

## பருவங்கள் உங்களுடையது

மிகுந்த நம்பிக்கையோடு பாரசீகத்தின் மீது போர் தொடுத்தான். ஆனால் படுதோல்வி கண்டான். தெய்வசந்நிதிக்கு வந்தான். "அருள் பொய்த்துவிட்டதே?" என்று கோபமாகக் கேட்டான்.

"பொய்க்கவில்லை. லிடியா என்கிற உன் பெரிய சாம்ராஜ்யம் உன்னால் அழிந்ததா, இல்லையா?" என்று பதில்வந்தது. தெய்வ உருவங்களில் கிடைக்கும் செய்திகளை தவறாகப்புரிந்துகொண்டால் அப்படித்தான் நேரும்.

தெய்வத்தின் கரங்களில் தாமரை என்பது வாழ்க்கையின் மிக மேம்பட்ட அம்சத்தைக் குறிப்பதாகும். வாழ்க்கையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல்,நம் கடவுள்கள் வன்முறையைப் போதிப்பவர்கள் என்று சொல்வது மூடத்தனம். வாழ்க்கையென்பது அமைதியுமல்ல; போருமல்ல. அது புரிந்துகொள்ள முடியாத பலவற்றின் கலவை!

"உலகமே தென்றல்வீசும் தோட்டம்போல் அமைதியாக மாறினால், நன்றாக இருக்குமே?"

உங்கள் பார்வையில் அமைதியாகத் தோன்றும் எதுவும் உண்மையில் அமைதியாக இல்லை. தென்றல்வீசும் தோட்டத்தைக்கூட மேலோட்டமாகப்பார்த்து முடிவு செய்வது தவறு. பூமிக்குக் கீழே சென்று பாருங்கள் வேர்களுக்கும் புழுக்களுக்கும் மண்ணுக்கும் மற்றப்பல உயிரினங்களுக்கும் அங்கே மிகப் பெரிய போர் நடந்து கொண்டு இருக்கிறது. கணத்துக்குக் கணம் அங்கே பல இலட்சம் உயிர்கள் மரித்துக்கொண்டிருக்கின்றன; பல இலட்சம் உயிர்கள் உற்பத்தியாகிக் கொண்டிருக்கின்றன. ஆழமாக யோசித்தீர்களென்றால் வன்முறை என்பதும் வாழ்க்கையில்லை; அமைதியென்பதுதும் வாழ்க்கையில்லை; உயிர்கள் உற்பத்தியாவதும் அழிவதுமான இந்தச்சுழற்சிதான் வாழ்க்கையென்று புரிந்து கொள்வீர்கள்.

"அப்புறம் எதற்காக அமைதி, அமைதி என்று நம் கலாசாரம் கூவுகிறது?"

அமைதியென்பது வெளியே நிகழும் ஒன்றாக இந்தக்கலாசாரத்தில் நினைக்கவில்லை. அது உள்ளே மலர்வதாகவே நினைத்திருந்தார்கள். அதனால்தான் தேடுதலை உள்நோக்கித் திருப்பினார்கள்.

வெளியுலகில் அமைதியாக இருப்பதோ போரில் ஈடுபடுவதோ, ஈடுபடாமல் இருப்பதோ உங்கள் கைகளில் இல்லை. வாழ்க்கை எல்லா அம்சங்களையும் உள்ளடக்கியது. அனால் உள்ளே எப்போதும் அமைதியாக இருப்பது உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

சங்கரன்பிள்ளை தன் இளைய மருமகனை எந்தக் கல்யாணத்தில் பார்த்தாலும், "அடுத்தது உனக்குத்தான்!" என்று அவன் விலாவில் குத்திச் சிரிப்பார்.அவரின் இந்தச் செயல் ஆரம்பத்தில் வேடிக்கையாக இருந்தாலும் ஒரு கட்டத்தில் அவனுக்கு வெறுப்பு வந்தது.

இந்த நிலையில் அவன் குடும்பத்தில் முதியவர் ஒருவரின் மரணம் நிகழ்ந்தது. அனுதாபம் தெரிவிக்க வந்தவர்களில் சங்கரன்பிளைள்ளையும் ஒருவர். இளைய மருமகன் வேகமாக அவர் அருகில் போய் விலாவில் குத்தி "அடுத்தது உங்களுக்குத்தான்" என்றான்.

அன்றிலிருந்து சங்கரன்பிள்ளை , அவனைச் சீண்டுவதை நிறுத்தினார். அடுத்தது தான்தான் என்பதை மறந்து விட்டுத்தான் பலரும் ஆயுதங்களைத் தூக்குகிறார்கள்.

இந்தப்பூமியில் இருக்கும் உயிரினங்களுக்கு பருவங்களை அமைத்தது இயற்கை. விதிக்கப்பட்ட பருவத்தில் தாவரங்கள் பூக்கும்; காய்க்கும்; இன்னொருபருவத்தில் இலை உதிர்க்கும்.

மிருகங்களுக்கும் அப்படித்தான்... எப்போது தங்கள் இணையோடு சேரவேண்டும் என்று அவற்றுக்கும் பருவங்கள் உண்டு. பறவைகள் குறிப்பிட்ட பருவங்களில் இடம் பெயரத்தவறுவதில்லை.

மனிதர்களுக்கு மட்டும் பருவங்கள் நிர்ணயிக்கப்படவில்லை. புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு, அவனாகவே தனது பருவங்களை நிர்ணயித்துக்கொள்ளும் உரிமையை இயற்கை அவனுக்கு வழங்கியிருக்கிறது. எனவே அமைதியாக இருப்பதும் அவன் கைகளில்தான் இருக்கிறது.

ஒருவன் நினைத்தால் 365 நாட்களும் அவனுக்கு வசந்தகாலமாகவே அமைய முடியும்.

இங்கு யாரும் யாரைவிடவும் உயர்ந்தவர் இல்லை; தாழ்ந்தவரும் இல்லை. எல்லோரையும் தவிர்த்துவிட்டு, யாரும் இங்கே தனியாக வாழ்ந்துவிட முடியாது. என்பதை மனிதர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப்புரிதலுடன் வாழ்க்கையை அணுகினால் ஆயுதங்களுக்கு அவசியமே இராது. விஷம் தொலையும்...அமுதம் பெருகும்!

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலக்கியப்படைப்பு படைப்பாளியின் பிம்பத்தை உணர்த்துமா? 04

நமது மொழியின் மேலுள்ள பற்று ஒரு வெறியாகமாறி மற்ற மொழிகளையோ மற்றய கலாசாரங்களையோ வெறுத்து ஒதுக்கும் பான்மை உங்களை நீங்களே அழித்துக்கொள்வதற்கு ஒப்பானதாகும். இந்தத் தொடர்பில் என் கவிதை ஒன்று ஞாபகத்துக்கு வருகிறது.

"சாகப் போகிறவன் தண்ணீர்
கேட்டுக் கதறினான்
அவன் தங்கள் மொழியில்
புலம்பவில்லை
என்பதினால் சாகவிட்டார்கள் சிலர்
'சபாஸ்' என்றார்கள் சகமனிதர்கள்
ஊமை ஒருத்தஉள்ளூரப் புலம்பிக்
கொண்டிருந்தான்
தன்மொழியை மொழிபெயர்க்க
ஒரு மொழியும் இல்லாமல்!"

பிறநாட்டு நல்லறிஞர்கள் சிந்தனைகளைத்தமிழ்மொழியில் பெயர்த்து வளப்படுத்தும் முயற்சிகள் இப்போது அவசியம். ஒரு மொழியின் மூலம் ஒரு பிரதேசத்தின் மக்களைப் பற்றி, அவர்கள் கலாசாரங்கள் பற்றி, நிர்வாகங்கள் பற்றி, கலைகள் பற்றி இப்படி எத்தனையோ விடயங்களை இன்னொரு பிரதேச மக்கள் அறிந்து கொள்ளலாம். அதேசமயம் அந்த மொழிபெயர்பு இனங்களின் வெறுப்பையும் துவேசங்களையும் தூண்டிவிடாத பான்மையில் இருந்தால்தான் மனிதகுலத்துக்கு இன்று அவசியமான படைப்பாக அது ஆக்கபூர்வமான செயலாக இருக்கமுடியும்.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

ஒரு மொழியை அதன் பிரதேச அரசியல் பின்புலங்களில் இருந்து மீட்டு அந்த சிந்தனைகளின் பயன்களைத் தெரிந்துகொள்வது ஒரு ஆராக்கியமான உறவுக்கும் பரிவர்த்தனைக்கும் வழிவகுக்கும்.

இன்று எனக்கு சீனக்கவிதைகளையும் ஜப்பான்' கவிதைகளையும் சந்தால் பழங்குடியினரின் கவிதைகளையும் இஸ்லாமியப் படைப்புக்களையும் வங்காளப் பாடல்களையும் ஆபிரிக்கக் கவிதைகளையும் வாசிக்கும் வாய்ப்பு கிடைக்கும் போது என்பார்வை விசாலமாகிறது. இதுவரை அறிந்துகொள்ளாத பல புதிய முகங்கள், இயற்கையின் பல்வேறு பரிமாணங்கள் என் பிரக்ஞையை வளப்படுத்துகின்றன.

ஒரு எழுத்தாளனுக்கு தன் மொழியில் நல்ல தேர்ச்சி அவசியமானதுதான். ஆனால் அதைவிட முக்கியமானது அவன் தன் படைப்புக்கு ஏற்ற விதத்தில் தன் மொழியை எவ்வளவு நுண்மையுடன் கையாளுகிறான் என்பது. ஒரு மொழியை செயற்கைத்தனமற்ற இயல்பான நேர்த்தியுடன் வெளிப்படுத்தும்போது இலக்கியப் படைப்பு மிகவும் சிறப்படைகிறது. முடிவாக ஒரு விடயம். எழுத்தாளன் என்பவன் தன்னை ஏதோ அபூர்வமான, சராசரி மனிதர்களில் இருந்து வேறுபட்ட மனிதப்பிறவியாக நினைத்துக்கொள்ளக்கூடாது... ஒரு எழுத்தாளன் எவ்வளவுக்கெவ்வளவு தன் சகமனிதர்களோடும் வாழ்க்கையோடும் அக்கறையும்நேசமும் கொண்டவனாக இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் படைப்புக்கள் அர்த்தமுள்ளதாக, இலக்கிய நியாயம் உள்ளதாக இருக்கும். ஒரு படைப்பாளிக்கு தன்மொழியின் மீதுள்ள அக்கறையைவிட இந்தப் பூமியின்மீதும் வாழ்க்கைமீதும் மேலதிகமான ஈடுபாடு அவசியம் என்று கருதுகிறேன்.

**வைத்தீஸ்வரன்-தமிழ்நாடு**

"இந்த உலகம் நம்மால் அழியாமல் இருக்கட்டும்" என்பதுதான் இன்றைய எழுத்தாளனின் தாரக மந்திரமாக இருக்கவேண்டும்.

(முற்றும்)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக புதிய குழுக்களை அமைப்பது ஏமாற்றுவித்தை

## ஜனநாயக மக்கள் முன்னணி விசனம்

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பது தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவை நியமிக்க உள்ளதாக அரசாங்கம் தெரிவித்திருப்பது குறித்து ஜனநாய மக்கள் முன்னணி விசனம் வெளியிட்டுள்ளது .

இது குறித்து ஜனநாய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் குமரகுருபரன் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்காக முன்னர் நியமிக்கப் பட்ட சர்வகட்சி பிரதிநிகள் குழு என்பது ஒரு ஏமாற்று வித்தையா எனக் கேள்வி எழுப்பியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ;

ஒன்றரை வருடங்களாக சுமார் 14 கட்சிகள் இணைந்து 137 கூட்டங்களை நடத்தி அதன் ஊடாக சர்வகட்சி பிரதிநிதிகள் ஒரு தீர்வுத் திட்டத்தினை வகுத்திருந்தது.

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான சர்வகட்சி பிரதிநிதிகள் குழு குறித்த அறிக்கையை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தது.

குறித்த சர்வசட்சி பிரதிநிதிகள் குழு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் என நம்பிக்கை ஊட்டி ஜனாதிபதி குறித்த குழுவை அமைத்திருந்தார்.

குறித்த குழுவுக்கு வெளிநாடுகள் உதவி செய்தன. நாங்கள் லண்டன் மற்றும் அயர்லாந்துக்கு சென்று அங்கிருக்கும் அதிகார பரவலாக்கலையும் இந்தியா சென்று கிராமிய ஆட்சிகளையும் பார்வையிட்டோம். அதனைத் தொடர்ந்து நாம் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வினை அறிக்கையாக முன்வைத்தோம் .

இப்போது நாடாளுமன்ற தெரிவுக் குழு அமைக்கப்படுவதனால் முன்பு அமைக்கப் பட்ட சர்வகட்சி பிரதிநிதிகள் குழு ஒரு ஏமாற்று வித்தையா? இதன் மூலம் அரசாங்கம் தன் நாட்டுக் கட்சித் தலைவர்களை ஏமாற்றியுள்ளது என்ற ஒரு கேள்வி எழுகின்றது .

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வினை வழங்க சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை உள்ளது. அல்லது தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் உள்ளது .

இவ்வாறு இருக்கின்றபோது புதிய குழுக்களை அமைத்து காலத்தை கடத்துவது ஏன்? இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்களையும் உலகத்தையும் எமாற்றும் ஒரு செயலாக அமையும் என ஜனநாய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் சுட்டிக் காட்டியுள்ளார் . (ஸ்ரீ-2)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் மகிழ்வகம்,இலங்கை களப் பறவைவியல் குழு,தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் ஆகியன இணைந்து சூழலியல் மற்றும் பறவை ஆய்வியல் எனும் தொனிப்பொருளில் மாணவர்களுக்கான செயலமர்வு நடைபெற்று வருகிறது.

இச்செயலமர்வினை இலங்கை விஞ்ஞான சங்கத் தலைவர் மற்றும் கொழும்புப் பல்கலைக்கழக விலங்கியற்றுறை,இலங்கை களப் பறவையியல் குழுச் செயற்பாட்டாளருமான பேராசிரியா சரத் கொட்டகம வழி நடத்தி வருகிறார்.

இச் செயலமர்வின் தொடர்ச்சியாக இன்று காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறும் செயலமர்வில் யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம், யா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ,யா/ இளவாலை திருக்குடும்ப கன்னியர் மகா வித்தியாலயம், யா/ மகாஜனாக் கல்லூரி போன்ற பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றவுள்ளனர். (ஸ்ரீ)

## பொங்கல் விழா

வவுனியா புத்தூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் காலை 9 மணிக்கு விசேட பூசையும் அர்ச்சனை, பாற்காவடி, பாற்செம்பு, தீச்சட்டி என்பனவும் இரவு 9 மணிக்கு நாகதம்பிரான் வீதி உலா வருகின்ற காட்சியும் மறு நாள் அதிகாலை 3 மணிக்கு பொங்கல்விழா நிகழ்வும் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-3)

# தமிழ் அரசியல் கைதிகள் துன்புறுத்தப்படுகின்றனர்

## — நாம் இலங்கையர் அமைப்பு குற்றச்சாட்டு —

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் துன்புறுத்தப் படுவதாக நாம் இலங்கையர் அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலை மற்றும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகள் புறக்கணிக்கப் பட்டு வருவதாகவும் அவர்கள் துன்புறுத்தப் படுவதாகவும் குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளை சிறைச் சாலை அதிகாரிகள் உதாசீனம் செய்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை ஏனைய சிறைக்கைதிகளும் சிறைச் சாலை அதிகாரிகளும் துன்புறுத்துவதாக தமக்குத் தகவல் கிட்டியுள்ளதென நாம் இலங்கையர் அமைப்பின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் என்ற காரணத்தால் இவர்கள் துன்புறுத்தப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் எவ்வித குற்றச்சாட்டுக்களையும் சுமத்தாது நீண்ட காலத்திற்கு தடுத்து வைத்திருத்தல் நீதியாகாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களைக் கூட இன்னமும் அரசாங்கம் வெளியிடவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

700 தமிழ் அரசியல் கைதிகளே முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன வெளியிட்ட புள்ளி விபரத்தரவு பிழையானது என அவர் சுட்டிக்காட்டிள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆயிரத்து 700 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக முன்னர் அரசாங்கத் தகவல்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. அவ்வாறான ஒரு பின்னணியில் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை எவ்வாறு 700 ஆக மாறியது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கைதிகளைப் பார்வையிடச் செல்லும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மீதும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மொழிப் பிரச்சினை மற்றும் போதியளவு சட்டவசதிகள் இல்லாத காரணத்தினால் பெருமளவான கைதிகள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் சமாதானத்தை நிலை நாட்ட மெய்யாகவே ஆர்வம் காட்டினால் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் கூடுதல் சிரத்தையுடன் செயற்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# கிளிநொச்சியில் 250 பேருக்கு இலவச கண் சத்திரசிகிச்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முதற்தடவையாக இலவச கண் சத்திரசிகிச்சை முகாம் கிளிநொச்சி வைத்தியசாலையில் நடைபெற்றது.

மேற்படி முகாமானது, கொழும்பிலிருந்து வருகை தந்த விசேட கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் சரித்பொன்சேகா தலைமையிலான வைத்திய குழுவினரால் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டு நடைபெற்றது.

இம் முகாமில் கிளிநொச்சி மாவட்டத்தில் பல பிரதேசங்களிலிருந்து இனங்காணப்பட்ட 250 நோயாளர்களுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது.

நோயாளர்கள் அனைவரினதும் கண் சத்திர சிகிச்சைக்கான செலவுகளை அரசாங்கமே பொறுப்பேற்றுள்ளது.

இதற்கமைய ஒரு நோயாளிக்கு மேற்படி சிகிச்சையினை பூரணமாக மேற்கொள்வதற்கான செலவாக ஒரு இலட்சம் ரூபாவினை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

இதில் கண் சிகிச்சை செலவு, கண்ணாடி, கண்ணாடிலென்ஸ், போக்குவரத்து உள்ளிட்ட அனைத்து செலவுகளும் அடங்குகின்றன.

இச் சத்திரசிகிச்சை முகாம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறியின் வழிகாட்டலின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரது முயற்சியால் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார பணிப்பாளர் கார்த்திகேயன், கொழும்பு மேலதிக சுகாதார அமைச்சின் செயலாளர் மதுபால மற்றும் பிரதி பிரதம செயலாளர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தி. இராசநாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஸ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை உதயசூரியன் சனசமூக நிலையத்தின் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலையமண்டபத்தில் வ. முருகேசு தலைமையில் நடைபெறவுள்ளது.

நிலைய உறுப்பினர்கள் மற்றும் புதிதாக இணைய விரும்புபவர்கள் கூட்டத்துக்குச் சமுகமளிக்கும்படி அழைக்கப்படுகின்றனர்.

(ஸ்ரீ)





பளை வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் என்றிப் நிறுவனத்தினால் 9.9 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் படங்களில்காணலாம்.

(படங்கள்:- என். குமார்)

# அரசுக்கு அழுத்தம் கொடுக்க இலங்கைக்கு வந்த மூவரணி



பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் டெல்லிப் பயணத்தை அடுத்து, இலங்கை அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் இந்திய அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்குச் செல்வதற்கான திகதியை நிர்ணயம் செய்திருந்தது.

இந்தக் குழுவானது யூன் 10 அன்று கொழும்பை வந்தடைந்தது. இந்தக் காலப்பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ரஸ்யாவில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில், இந்திய அதிகாரிகள், தாம் இலங்கை பயணத்திற்கான திகதிகளை மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், தாம் இலங்கை ஜனாதிபதியை சந்திக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி தகவல் ஒன்றை அனுப்பியிருந்தனர். அவர்கள் தமது திகதிகளையும் மாற்றிக் கொண்டனர்.

ஆரம்பத்தில், இலங்கையில் தாம் சந்திக்க வேண்டிய முக்கிய தரப்பினர்கள் அனைவரிற்கும் ஏற்ற விதத்தில் திகதிகளைத் தாம் மாற்றிக் கொள்ளவுள்ளதாக இந்திய அதிகாரிகள் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினர். இதற்கான உறுதிப்பாட்டையும் அவர்கள் இலங்கையிடமிருந்து பெற்றுக்கொண்டனர்.

இந்திய - இலங்கை கூட்டறிக்கையின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கை அவர்களுக்கு 'பத்து கட்டளைகள்' போன்றது.

இந்தியக் அதிகாரிகள் குழு கடந்த வெள்ளியன்று பேராசிரியர் ஜி.எல். பீரிஸுடன் சந்திப்பொன்றை நிகழ்த்தினர். ஜனாதிபதி மகிந்த, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியோருடனான சந்திப்பும் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இந்திய அதிகாரிகள் குழுவிற்கும் இடையிலான சந்திப்பில், 13வது திருத்தச்சட்டம், அதிகாரப் பகிர்வு மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்கள் போன்ற விடயங்கள் மையப்படுத்தப் பட்டிருந்தன.

மகிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன் பீரிஸ், இலங்கை - இந்தியா கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும், தற்போது இந்த விடயமானது இலங்கை அரசாங்கத்தின் மத்தியில் பாரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது.

இலங்கை அரசாங்கத்திற்குள் ஏற்பட்டுள்ள பிளவானது இவ்விரு நாடுகளின் கூட்டறிக்கை தொடர்பான அதிருப்தியை வெளிக்காட்டியுள்ளதுடன், இந்தப் பிளவானது வேறு திருத்தச்சட்டங்களை உருவாக்க அழுத்தம் கொடுப்பதாக அல்லது இந்த உடன்

> மகிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன் பீரிஸ், இலங்கை - இந்தியா கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும், தற்போது இந்த விடயமானது இலங்கை அரசாங்கத்தின் மத்தியில் பாரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது.
>
> இவ்வாறு கொழும்பை தளமாகக்கொண்ட த சன்டே லீடர் ஊடகத்தின் அரசியல் பத்தியில் எழுதப்பட்டுள்ளது. அப்பத்தியை 'புதினப்பலகை'க்காக மொழியாக்கம் செய்தவர் நித்தியபாரதி.

## கூட்டறிக்கையில் உள்ளவற்றை மகிந்தவே நடைமுறைப்படுத்துவாரா?

படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் தாம் ஒத்துப் போகவில்லை என்பதையே வெளிக்காட்டி நிற்கிறது.

இக்கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில், திருகோணமலையின் சம்பூர் அனல் மின் திட்டத்தை முழுமைப்படுத்துவதிலேயே இந்திய அரசாங்கம் மிகவும் ஆர்வமாக உள்ளது.

இந்த அனல் மின் நிலையத் திட்டத்தைப் பூர்த்தியாக்குவது மட்டுமல்லாமல், இந்நிலையத்தைச் சுற்றி புதிய குடியேற்றங்களை நிறுவுவதிலும் இந்திய அரசாங்கம் மிகவும் ஆர்வமாக உள்ளது. இந்த புதிய குடியேற்றங்கள் என்பது ராஜபக்ஷவிற்கு மிகவும் கவலையான விடயமாக இருந்தது.

அனல் மின் நிலையம் தொடர்பாகவும் அதனைச் சூழ அமைக்கப்படும் புதிய குடியேற்றங்கள் தொடர்பான திட்டத்தையும் உள்ளடக்கியிருந்த இந்தக் கூட்டறிக்கை தொடர்பாக இந்திய அரசாங்கம் எவ்வளவு தூரம் தனது கரிசனையைக் காட்டி நிற்கின்றது என்பது தெரிகிறது..

இது தொடர்பாக கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், த்ற்போது இலங்கை அரசாங்கமானது இது தொடர்பான தனது நிலைப்பாட்டை மீண்டும் சீர்தூக்கிப் பார்க்கின்றது.

திருகோணமலையில் இந்த திட்டத்தை முழுமைப்படுத்தும் பட்சத்தில் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நடைமுறைகளில் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டிவரலாம் என அரசாங்கத் தரப்பு நோக்குகின்றது.

தற்போது இலங்கை அரசாங்கமானது தனது நிலைப்பாட்டை மாற்ற வேண்டியுள்ளது. பீரிஸ் இந்தியாவிற்கான தனது பயணத்தை மேற்கொண்டு கூட்டறிக்கையில் கையெழுத்திட்டு ஒரு மாத காலம் கடந்த நிலையில், இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பூர் குடியேற்றம் தொடர்பாக எந்தவொரு முன்னகர்வையும் இலங்கை அரச தரப்பு மேற்கொள்ள முனையவில்லை.

**சம்பூர் அனல் மின் நிலையமும் புதிய குடியேற்றமும்.**

சம்பூர் அனல் மின் நிலையமானது, இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் மட்டத்தில் ஒரு விவாதப் பொருளாக உள்ளது. இந்த அடிப்படையில், இந்த அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பாக பல தடவைகள் தமக்கிடையே கலந்தாலோசித்துள்ளனர்.

அனல் மின் நிலையத்தைச் சுற்றி உருவாக்கப்படும் புதிய குடியிருப்பானது கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பிற்கு மிகவும் அச்சுறுத்தலாக அமையும் என்பது இலங்கையின் சட்டமாஅதிபரின் கருத்தாகும்.

சம்பூர் அனல் மின் நிலைய விடயம் தொடர்பாக ஒரு சமரச ரீதியாக மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்பதே சட்டமாஅதிபரின் வேண்டுகோளாகும். 'இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கமானது இந்தியாவின் உடன்பாட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்' என இவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இது தொடர்பான மாற்றத்தை இந்தியாவிற்கு அறிவிக்க வேண்டுமா அல்லது இது தொடர்பான மாற்றத்தை இலங்கை அரசாங்கமானது தானாகச் செய்ய வேண்டுமா என்பது சட்டமாஅதிபரின் அறிவுரையிலிருந்து தெளிவாக அறிய முடியாதுள்ளது.

ஆனால், சம்பூர் அனல் மின் நிலையம் தொடர்பாகவோ அல்லது அங்கு புதிதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்பு தொடர்பாகவோ, மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கமான்து எந்தவொரு நகர்வுகளையும் முன்னெடுப்பதற்கான தெளிவான நிலைப்பாட்டை இன்னமும் எடுக்கவில்லை என்பது மட்டும் வெளிப்படை.

சனிக்கிழமை அன்று இந்திய அதிகாரிகளுக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்தவுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலில் இந்த விடயங்கள் அலசி ஆராயப்பட்டுள்ளன.

இந்தியக் குழுவானது இலங்கைத் தீவிற்கு வருகை தந்து உயர் மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் என்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் எந்தவொரு உறுதியான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை என்பதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. கூட்டறிக்கையின் மூலம் எழுத்துவடிவாக்கப்பட்டுள்ள விடயங்களை உடனடியாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இக்கூட்டறிக்கையில் கையெழுத்திட்டுள்ள போதிலும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமே இவற்றை அமுல்ப்படுத்தும் அதிகாரம் உள்ளது என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அத்துடன் இந்த கூட்டறிக்கை விடயங்களை நிறைவேற்றுவதில் இலங்கை ஜனாதிபதி தரப்புப் பின்னடிப்பதையும் இந்தியா கண்டறிந்துள்ளது.

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ், இந்திய பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார், இந்திய தேசிய பாதுகாப்பு அலோசகர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் இலங்கையிற்கான இந்தியக் குழுவில் அங்கம் வகித்துள்ளனர்.

இக்குழுவின் இலங்கை வருகையானது, இந்தியா, இலங்கை சார் விடயத்தை எவ்வளவு தூரம் முக்கியப்படுத்தியுள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றது.

கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை இலங்கை அரசாங்கமானது எவ்வளவு தூரம் கையாண்டுள்ளது என்பதையும் இந்த விடயங்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிவதே இந்தியக் குழுவின் அடிப்படை நோக்காகும்.

இந்த நேரத்தில், ஐக்கியப்படுத்தப்பட்ட அல்லது ஒன்றிணைக்கப்பட்டுள்ள இலங்கைத் தீவிற்குள் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் உயர்ந்தளவில் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இந்தியா ஆதரவாக இருக்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகும்.

இந்நிலையில், திறந்த அறிக்கையின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்துள்ளதுடன், இது அரசாங்கத் தரப்பிற்கான அழுத்தமாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறான நெருக்கடியின் மத்தியில் இலங்கை அரசாங்கமானது, அதிகாரப் பகிர்வு விடயத்தையோ அல்லது தனிநாட்டுக் கோரிக்கையையோ மூடிமறைத்துவிட முடியாது. மீண்டும் தேர்தல்கள் இடம்பெறும் வரை, இந்தியாவானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குப் பக்கபலமாக இருக்கும் என்பதே இதற்கான காரணமாகும்.

(தொடரும்)

# வீட்டுத்திட்ட உதவிகளில் அரச அதிகாரிகளின் குடும்பங்களையும் உள்வாங்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் பகுதியில் கடந்த 21 வருடங் களின் பின்னர் மீள்குடியேறிய அரச அதிகாரிகளின் குடும்பங்கள் வீட்டுத் திட்டத்தினுள் உள்வாங்கப்படவில்லை எனவும் இதனால் தாம் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதியில் மீள் குடியேறியுள்ள அரச அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்டு பல்வேறு துன்பங்களை அனுபவித்துவரும் தமக் கும் மீள் குடியேற்றப்பகுதிகளில் அரசாங் கத்தால் வழங்கப்படும் சலுகைகள் கிடைக்க வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட மாவிட்டபுரம் பகுதியில் முன்னெடுக்கப் படும் வேலைத்திட்டங்களுக்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் வீமன்காமம் வித்தியா லயத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டபோதே அவர் கள் மேற்கண்ட கோரிக்கையை முன் வைத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

போரினால் பாதிக்கப்பட்ட மீள் குடி யேறும் மக்களுக்கு கிடைக்கும் அரச சலுகைகளிலிருந்து அரச அதிகாரிகள் புறக்கணிக்கப் படுகின்றனர்.

குறிப்பாக வீட்டுத்திட்டங்களில் அரச அதிகாரிகளின் குடும்பங்கள் உள்ளடக் கப்பட வில்லை எனத் தெரிவித்தனர்.

இதனையடுத்து உரையாற்றிய பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தெரிவிக்கையில்,

மீள்குடியேற்றப்பட்ட அனைவருக் கும் அரச சலுகைகள் கிடைக்கநடவடிக்கை எடுக் கப்படும் எனவும் வீட்டுத்திட்டத்தில் அரச அதிகாரிகளின் குடும்பங் களும் இணைக் கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ-6)


## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்டச் செயலக நிதிக்கிளையில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றும் திருமதி. துஷ்யந்தினி சோதிநாதன் அவர்களின் தந்தையார்

### அருட்பிரகாசம் நாகேந்திரநாதன்

அவர்கள் நேற்று (2011.06.15) மறைந்த செய்தி கேட்டு ஆறாத் துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த் தித்து அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிதிக்கிளை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

(5204)

பிரதம கணக்காளர்,
கணக்காளர்,
உத்தியோகத்தர்கள்.


# புலிகள் மீதான தடையை நீக்கக்கோரும் வழக்கை விரைவாக விசாரிக்க வேண்டும்

## வைகோ கோரிக்கை



தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்ககோரும் வழக்கை விரைவாக விசாரிக்க வேண்டுமென சென்னை உயர்நீதி மன்றத்தில் ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ நேரில் சமுகமளித்து வலியுறுத் தியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கக்கோரிய வழக்கை விசாரிப்ப தற்காக டில்லி உயர் நீதிமன்றம் தீர்ப்பாயம் ஒன்றை நியமித்திருந்தது.

இத்தீர்ப்பாயம் மேற்கொண்ட விசாரணை யில் வைகோ நேரில் சமுகமளித்து வாதா டியிருந்த போதிலும் தமிழீழ விடுதலைப் புலி கள் மீதான தடையை நீடிக்க வேண்டும் என்று டில்லி உயர் நீதிமன்றம் தலைமை யிலான தீர்ப்பாயம் தீர்ப்பளித்திருந்தது.

இத்தீர்ப்பை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வைகோ மனுத்தாக்கல் செய் திருந்தார். இந்த வழக்கு கடந்த 13 ஆம் திகதி விசாரணைப்பட்டியலில் இடம் பெற்றிருந் தது.

சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.வை இக்பால் ,நீதிபதி டி.எஸ் சிவ ஞானம் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் நேரில் சமுகமளித்த வைகோ இவ்வழக்கை விரைவாக விசாரிக்க வேண்டு மென வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி தாங்கள் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்காக உயர்நீதி மன்றம் ஏற்றுக் கொண்டிருப்பது தங்களுக்கு கிடைத்த முதற்கட்ட வெற்றி எனவும் விடுத லைப்புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு ம.தி.மு.க தொடர்ந்து முயற்சிகளை மேற் கொள்ளும் எனவும் அவர் ஊடகவியலா ளர்களிடம் கூறியுள்ளார்.

அத்துடன் இலங்கைக்கு பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்றும் போர் குற்றங் களுக்காக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவை சர்வதேச அளவில் விசாரிக்க வேண்டும் என்று தமிழகசட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருப்பதை வரவேற்கிறோம் எனவும் அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# வித்தியா மாலை அணிதல் நிகழ்வு

காரைநகர் கோட்டப் பாடசாலை மாணவர் களுக்கும் தனியார் கல்வி மாணவர்களுக் கும் வித்தியாமாலை அணிவிக்கும் நிகழ்வும் தீராத நோய்களினால் பாதிப்படைந்து துன் பப்படும் மக்களுக்கு ஸ்ரீ அம்மா பகவான் ஆரோக்கிய தீட்சை வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை8.15 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன் மீக பிரார்த்தனை மையத்தினரால் காரைநகர் புது வீதியிலுள்ள காரைநகர் அபிவிருத்திச் சபை நிறுவனத்தில் நடத்தப்படவுள்ளது.

அன்றையதினம் கலந்து கொள்ளும் மாணவர்கள் நீராடி 21 தினங்கள் சைவ உணவு அருந்தக்கூடியவாறு புனிதமாக வருகை தருமாறு அழைக்கப்படுகின்றனர். (ஸ்ரீ)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை மகாலிங்கம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் சோதிவேம்படி லேன் மானிப் பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகாலிங்கம் 11.06.2011 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை -நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் இளையவன்-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும்,

ஆதவன், சங்கீதா (லண்டன்), றமணன், கார்த்திகா, நர்மதா, அகிலன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயகுமார் (லண்டன்), சுகந்தினி, சிவகுமார், (ரெயிலர், சிவாரெயிலறிங் சென்ரர்), பாகேஸ்வரி (B.A.Hons) நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்), கபில்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

ஆரணி, கம்சிகா, அபினஜா, சுலக்ஷினி, பபின்ஷன், அஸ்வினி, கெபின் ஆகியோரின் பாசமிகு பேரனும், செல்வக்கண்டுவின் உடன்பிறவாச் சகோதரரும், பரிமளத்தின் மைத்துனரும், வசந்தி (பிரான்ஸ்), புவனேஸ்வரி, ரவிச்சந்திரன், ரவிகுலன்(பிரான்ஸ்), வனஸ்வதி, சுதாகரன்(டோகா), செந்தூரன்(எலோன்ஸ் ரெயிலர், கொழும்பு), கோமதி(இந்தியா), பிரகலாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2011) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:-0033646333002
0033660260350

தகவல்
பெறாமக்கள்,
செ.ரவிகுலன் (பிரான்ஸ்), செ.பிரகலாதன்(பிரான்ஸ்),

(5202)

# அமெரிக்காவில் புழுதிப் புயல் தாக்கியதில் 153 பேர் பலி

(சிகாகோ)

அமெரிக்காவில் புழுதிப்புயல் தாக்கி 153 பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் மிசௌரி நகர் அருகே உள்ள ஜாப்பிலின் என்ற இடத்தில் நேற்று முன்தினம் பயங்கர புழுதிப் புயல் தாக்கியது.

மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் 10 கிலோ மீற்றர் சுற்றளவுக்கு புழுதிப் புயல் சுழன்று அடித்தது.


இதில் பல வீடுகள் நொறுங்கி தூக்கி வீசப் பட்டன. இதில் சிக்கி 153 பேர் உயிரிழந் துள்ளனர். இந்தப் புழுதிப் புயலினால் பல கோடி ரூபாய்க்கு மேல் சேதம் ஏற்பட்டுள்ளது என் றும் இங்கு இயல்பு வாழ்க்கை திரும்ப சில மாதங்கள் ஆகும் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-




லிபியா நாட்டில் பெரும் மோதல் இடம்பெற்றுவரும் நிலையில் எதைப் பற்றியும் கவலைப்படாமல், சர்வதேச செஸ் கூட்டமைப்பின் தலைவர் கிர் சன் இலியும் ஷனோவுடன் தீவிரமாக செஸ் விளையாடி மகிழ்கிறார் லிபிய ஜனாதிபதி முவம்மர் கடாபி. இதனை லிபிய அரச தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

# மனிதனின் மூளையின் அளவு சுருங்கியுள்ளது

## நிபுணர்கள் தகவல்



இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நிபுணர் டாக்டர் மார்தா லாகர் தலைமையிலான குழுவினர் மனிதனின் பரிணாம வளர்ச்சி குறித்து ஆய்வு மேற்கொண்டுள்ளனர். அவர்கள் ஆபிரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசிய கண்டங்களில் வாழும் மனிதர்களின் மண்டை ஓடுகளை பயன்படுத்தி ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

சமீபத்தில் இஸ்ரேலில் உள்ள குகைகளில் இருந்து மனித மண்டை ஓடுகள் கிடைத்தன. அது கடந்த ஒரு இலட்சம் முதல் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த குகை மனிதர்களுடையது என தெரிய வந்தது. அவர்கள் நடத்திய ஆய்வின் மூலம் இவர்கள் மிகவும் உயரமாகவும் கட்டுமஸ்தான உடலமைப்புடனும் இருந்தது தெரியவந்துள்ளது.

அதேபோன்று அவர்களின் மூளையின் அளவு பெரிதாக இருந்தது. அவர்களின் உடல் அமைப்பை தற்போது வாழும் மனிதர்களுடன் ஒப்பிட்டு ஆய்வு மேற்கொண்டனர். கடந்த 10 ஆயிரம் ஆண்டுக்குள் ஆதிகால மனிதனை விட தற்போதைய மனிதனின் உயரமும் உடல் எடையும் குறைந்துள்ளது.

அதே நேரத்தில் மூளையின் அளவும் 10 சதவீதம் குறைந்து சுருங்கி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு உணவுக் கட்டுப்பாடு மற்றும் சுகாதாரம் அற்ற சூழ்நிலை, இதைத் தொடர்ந்து ஏற்படும் நோய்களுமே காரணம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)


# கதிர்வீச்சு பாதித்த புகுஷிமாவில் காது இல்லாமல் பிறந்த முயல் குட்டி

## ஜப்பான் மக்கள் பீதி

கடந்த மார்ச் மாதம் 11 ஆம் திகதி ஜப்பானில் பூகம்பமும் அதனைத் தொடர்ந்து சுனாமியும் ஏற்பட்டது. இதில் புகுஷிமாவில் டாய் இச்சி அணுமின் நிலையம் சேதம் அடைந்தது: இதைத் தொடர்ந்து அங்குள்ள அணு உலைகளில் இருந்து கதிர்வீச்சு ஏற்பட்டு அது காற்றில் பரவியது.

குடிநீர்,பால் மற்றும் காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களில் ஊடுருவியது. இதனால் பாதிப்பு ஏற்படும் என கருதி 20 கி.மீற்றர் சுற்றளவில் தங்கியிருந்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். தற்போது ஓரளவு நிலைமை சீரடைந்ததும் மக்கள் மீண்டும் அங்கு திரும்பி வர தொடங்கி உள்ளனர்.

இந்த நிலையில் புகுஷிமா அருகே உள்ள நமி நகரில் யுகோ சுஜிமோடோ என்பவரின் பண்ணையில் காது இல்லாத முயல் குட்டி பிறந்துள்ளது. இந்த முயல் குட்டிக்கு காது மட்டுமே இல்லை என்ற குறை தவிர வழக்கம் போல் மற்ற உறுப்புகள் உள்ளன. வெள்ளை நிறம், சிவப்பு கண்களுடன் அது உள்ளது.



காய்கறிகள் மற்றும் புல்லை சாப்பிடுகிறது.

இந்த முயல் குட்டி பிறந்துள்ள நமி நகரம் கதிர்வீச்சு பாதித்ததால் கர்ப்பமான முயலுக்கு பாதிப்பு ஏற்பட்டு அது காது இல்லாத குட்டியை ஈன்று இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது ஜப்பான் மக்கள் மத்தியில் கடும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

கதிர்வீச்சு அபாயம் தற்போது வெளிப்பட தொடங்கி விட்டதாக கருதுகின்றனர். இதை நிபுணர்கள் மறுத்துள்ளனர். சில நேரங்களில் மனிதர்களை போன்று விலங்குகளும் இதுபோன்ற குறைபாடுடைய குட்டிகள் பிறக்க வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சர்வதேச நாணய நிதியத் தலைவராக அகஸ்டின் கார்ஸ்டென்ஸ்க்கு வாய்ப்பு




சர்வதேச நாணய நிதியத் தலைவர் பதவிக்கு தற்போது பிரான்ஸின் கிரிஸ்டீன் லகார்ட் மற்றும் மெக்சிகோவின் அகஸ்டின் கார்ஸ் டென்ஸ் ஆகிய இருவரிடையே மட்டும் போட்டி நிலவுகின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவராக இருந்த டொமினிக் ஸ்ட்ராஸ்கான் சமீபத்தில் பாலியல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட் டுள்ளார். அதன் பின் அந்நிறுவனத்தின் தலை வரை தேர்ந்தெடுக்கும் பணி ஆரம்பமா கியது. பிரான்ஸ் நிதி அமைச்சர் கிரிஸ்டீன் லகார்ட், மெக்ஸிக்கோ மத்திய வங்கியின் ஆளுநர் அகஸ்டின் கார்ஸ்டென்ஸ், இஸ்ரேல் மத்திய வங்கித் தலைவர் ஸ்டேன்லி பிஸ்சர் ஆகிய மூவருக்கிடையில் கடும் போட்டி நிலவியது.

லகார்டுக்கு, ஐரோப்பா, அமெரிக்கா, சீனா, இந்தோனேசியா உள்ளிட்ட பல நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இப்போட்டியில் ஆசிய நாட்டைச் சேர்ந்த நிபுணர் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஒருமித்து எழவில்லை.

அதனால் வழக்கம் போல் சர்வதேச நாணய நிதியத் தலைவராக ஐரோப்பாவைச் சேர்ந்த ஒருவர் தான் வர வாய்ப்புள்ளது. தலைவருக்கான போட்டியில் மொத்தம் 5 பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர். கடந்த 10 ஆம் திகதி மனுத்தாக்கலுக்கான கடைசி நாளாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி நேற்று முன்தினம் தலைவர் போட்டிக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதில் லகார்ட் மற்றும் கார்ஸ்டென்ஸ் இருவர் மட்டுமே இடம்பெற்றிருந்தனர். இஸ் ரேலின் பிஸ்ரட் இடம்பெறாதது குறித்து விளக்கமெதுவும் அளிக்கப்படவில்லை. தென்னாபிரிக்கா அமைச்சர் மற்றும் கஜகஸ்தான் மத்திய வங்கித் தலைவர் இருவரின் மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இது குறித்து நாணய நிதியத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில், இரு வேட்பாளர்களுடனும் நிர்வாகக் குழு கூடி ஆலோசிக்கும். அதன்பின் தேர்வு நடக்கும் என்றார். இதில் மெக்சிக்கோவின் அகஸ்டின் முந்தக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படலாம் என்று கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2)






பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் துருக்கியின் பிரதமராக பொறுப்பேற்ற ரீசெப் தைப்பிசர்டொஜன் (வலது) அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லாகுல்லை, தலைநகர் அங்காராவில் சந்தித்து உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# ஈராக் அரச அலுவலகங்கள் மீது தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு

## 8 பேர் பலி

ஈராக்கில் தியாலா மாகாணத்தில் உள்ள பாகுபா நகரில் அரச அலுவலகங்கள் உள்ளன. நேற்று முன்தினம் அங்கு அல்கொய்தா தீவிரவாதிகள் திடீரென துப்பாக்கியுடன் புகுந்து சரமாரியாகச் சுட்டனர்.

உடனே இராணுவ வீரர்களும் பொலிஸாரும் அங்கு விரைந்து சென்றனர். இராணுவ ஹெலிகொப்டர்களும் விரைந்தன. இவர்கள் தீவிரவாதிகளை நோக்கிச் சுட்டனர். பதிலுக்குத் தீவிரவாதிகளும் சுட்டதால் இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.

அப்போது அரச அலுவலகங்கள் மீது வட்டமிட்டபடி பறந்த ஹெலிகொப்டர்களில் இருந்தும் தீவிரவாதிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.அப்போது தற்கொலை படை தீவிரவாதிகள் அரசு அலுவலகத்துக்குள் 2 குண்டுகளை வெடித்து தாக்குதல் நடத்தினர்.

இதற்கிடையே 5 மணிநேர போராட்டத்துக் குப்பின் சண்டை ஓய்ந்தது. இந்தச் சம்பவத்தில் தீவிரவாதிகள் 3பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.ஒருவர் காயமடைந்தார். மேலும் அங்கு நடந்த துப்பாக்கிச் சூடு மற்றும் தற்கொலைத் தாக்குதலில் 17பேர் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்பு அரச அலுவலகங்கள் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 கார்களில் தீவிரவாதிகள் குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இச் சம்பவம் காலை 9.30 மணிக்கு நடந்தது. அதில் 8 பேர் உடல் சிதறிப் பலியானார்கள். கார்கள் மற்றும் 2 சக்கர வாகனங்கள் சேதம் அடைந்தன. கடந்த மார்ச் மாதம் சதாம் உசேனின் சொந்த ஊரான திக்ரித் நகரில் இராணுவ உடை அணிந்த தீவிரவாதிகள் அரச அலுவலகங்களில் புகுந்து இதுபோன்று தாக்குதல் நடத்தினர். அதில் 56 பேர் பலியாகினர். (ஸ்ரீ-2)

பூனை கறுப்போ சிவப்போ
எலி பிடித்தால் சரி.
*– சீனப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ் அதிகாரிகள் தெளிவாக இருக்க வேண்டும்

உலகில் தனி மனித ஆளுமைகளே மிகப் பெரும் சாதனைகளையும் பொருளாதாரப் புரட்சிகளையும் ஏற்படுத்தின – ஏற்படுத்தி வருகின்றன.

தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களின் சிந்தனையே அங்கு இலவசக் கல்விக்கு வித்திட்டது.

ஏழை மாணவர்கள் கல்வி கற்கவேண்டும் என்ற அவரின் அப்பளுக்கற்ற நினைப்பு தமிழகத்தின் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்டது எனலாம்.

இதுபோல அதிபர்கள், ஆசிரியர்களின் தனிப்பட்ட – துணிச்சலான செயற்பாடுகள் இந்த உலகிற்கு மகான்களையும் – அறிவாளர்களையும் தந்த வரலாறுகளைப் பார்க்கின்றோம்.

இதுபோல அரச அதிகாரிகளின் தூய பணி, பின்தங்கிய மக்களின் வறுமையைத் துரத்தியடித்து அந்த மக்களின் வாழ்வில் பெரும் கீர்த்தியை ஏற்படுத்திற்று.

இத்தகைய சேவையாளர்களை நோக்கும்போது அவர்கள் அனைவரிடமும் இருந்த பொதுவான இயல்பு அவர்கள் மக்களை நேசித்தனர், மக்களுக்காகப் பணியாற்றினர். அந்தப் பணியை மக்களோடு சேர்ந்து ஆற்றினர்.

அதனால் அவர்கள் இன்றும் என்றும் மக்களால் பேசப்படுகின்றனர். புகழப்படுகின்றனர்.

அண்மையில் கல்வியாளர் ஒருவர் எம்மைச் சந்தித்தார்.

நிர்வாக சேவையில் சித்தியடைந்து உயர் பதவிகளில் நியமனம் பெற்ற இளம் அதிகாரிகள் சிலரின் செயற்பாடுகள் பற்றி அவர் நம்மிடம் பேசினார். அதைக் கேட்டபோது வேதனை விக்கித்துக் கொண்டது.

அந்தப் பெரியவர் குறிப்பிட்ட ஒரு முக்கிய விடயம், பதவி கிடைத்ததும் சிலருக்கு ஆணவம் தலைக்கேறி விடுகிறது. அத்தகையவர்களால் மக்களுக்காக சேவையாற்ற முடியாது.

இத்தகையவர்கள் தங்கள் பதவியை மட்டும் நினைக்கிறார்களே தவிர பணியை – பொறுப்பை ஒருபோதும் நினைப்பதில்லை.

இவ்வாறு அவர் கூறிக்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் வடக்கு மாகாண ஆளுநரின் கேள்விகளுக்கு எமது அதிகாரிகள் சிலரால் தெளிவாகப் பதிலளிக்க முடியாமற் போயிற்று என்ற தகவலை அறிந்தபோது கவலை நெஞ்சை அடைத்துக்கொண்டது.

தமிழினம் அறிவாற்றல் மிக்க இனம் என்ற பெருமை எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் காப்பாற்றப்பட வேண்டும்.

அதற்கு எவரும் சோதனை நடத்த முடியாது என்ற நிலைமையை உருவாக்க வேண்டும். இவை நடைமுறைப்பட வேண்டுமாக இருந்தால், எங்கள் அதிகாரிகள்– அலுவலர்கள் தமது பணியில் தெளிவாக இருக்க வேண்டும், விழிப்பாக இருக்க வேண்டும். தமது பகுதி மக்களுடன் அன்பாக இருக்க வேண்டும். அப்போதுதான் தகவல்கள், பிரச்சினைகள், விவகாரங்கள் உங்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

மக்களை விட்டு நாம் அன்னியப்படுவோமாக இருந்தால் தகவல்களும் எங்களை விட்டு அன்னியப்பட்டுவிடும்.

யுத்த காலங்களில் உயிரைத் துச்சமாக மதித்து அரும்பணியாற்றிய எங்கள் அதிகாரிகளே, அலுவலர்களே உங்கள் பணிக்கு எவரும் பங்கம் செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அது எங்கள் சமூகத்திற்கு ஆறுதல் தரும்.

# மாகாணமட்ட எழுத்தாக்கப் போட்டி மற்றும் நாட்டுக்கூத்துப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட தமிழ்மொழித்தின எழுத் தாக்கப்போட்டி மற்றும் நாட்டுக் கூத்துப் போட்டி முடிவுகள் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

**பிரிவு–1**

ஆக்கம் – எழுத்து

பி. எடின்ஷிகா (மு/ யோகபுரம் ம.வி), றெ.ஜெ.சைனுகா (யா/ புனித ஜோன் பொஸ்கோ), வி.வைஷ்ணவி (வு/ சைவப்பிரகாச மகளிர் ம.வி.)

**பிரிவு–2**

கட்டுரை வரைதல்

க. அபிஷிகா (கிளி/முருகானந்தா ம.வி), ப.திவிஜா (யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி),வி. ஆன் கில்டா (மன்/தோட்டவெளி அ.த.க.பா)

**பிரிவு 3**

கட்டுரை வரைதல்

தே.உமையாளினி (யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ),ந. சாமந்தி (கிளி/ திருவையாறு ம.வி), பி.தரன்சிகா (வு/ கனகராயன்குளம் ம.வி)

**பிரிவு–4**

கட்டுரை வரைதல்
இலக்கியம் நயத்தல்

வா.ஜெயப்பிரசன்னா (யா/ஹாட்லிக் கல்லூரி), த.மேரி தயாளினி (மன்.புனித வளனார் றோ.க.த.க.பா),

**பிரிவு 5**

தமிழியற் கட்டுரை வரைதல்,
இலக்கியம் நயத்தல்

அ.டீனுஜான்சி (மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ச.அனுஜியா (மன்/கருங்கண்டல் றோ.க.த.க.பா), ம. கேசவன் (கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி

**பிரிவு 4**

இலக்கணப் போட்டி

க.கீதாஞ்சனா (யா/ வட இந்து மகளிர் கல்லூரி), சி.மேகலாதரன் (வு/ வவுனியா தமிழ் ம.ம.வித்தி), ம.சோபிகா ( கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி)

**பிரிவு 5**

இலக்கணப் போட்டி

ஜே.ஜேயகலா (மன்/சித்திவிநா யகர் இ.க), க.ஹேமா (யா/இந்து மகளிர் கல்லூரி), செ. கிசாந்தினி (வு/பூந்தோட்டம் ம.வித்தி), ஜெ.ஜனார்த்தகன் (மு/ மல்லாவி மத்திய கல்லூரி).

**பிரிவு 5**

திறனாய்வுப் போட்டி

தி.நிரோஷா (கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி), க. சோபிகா (கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி),

**பிரிவு 4**

குறுநாடக ஆக்கம்

பா. அஜித்தா (கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), வெ. தேனுகா (மு/ முல்லைத்தீவு ம.வி), மு.பிரகதி (மன்/ உயிலங்குளம் றோ. க.த.க.பா)

**பிரிவு 5**

குறுநாடக ஆக்கம்

இ. மைதிலி (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜெ. கோகிலா (கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி), அ. ஜெனிற் (மு/பாலிநகர் ம.வித்தி. (தொடரும்)

# அடுத்த வருடத்திற்கான புத்தகங்களை அச்சிட 300 கோடி ருபாய் ஒதுக்கீடு

அடுத்த வருடத்திற்கான பாடசாலைப் புத்தகங்களை அச்சிடுவதற்காக 300 கோடிரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் பதிப்பகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த வருடம் 3 கோடியே 30 இலட்சம் புத்தகங்கள் அச்சிடப்படவுள்ளன. இவற்றை டிசெம்பர் மாதம் விடுமுறைக்கு முன்னதாக மாணவர்களுக்கு வழங்குவதற்கு கல்வியமைச்சு எதிர்பார்த்துள்ளதாக அச்சக திணைக்களத்தின் ஆணையாளர் டபிள்யூ.எம். புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

புத்தகங்களை மீண்டும் பயன்படுத்துவது தொடர்பில் மாணவர்கள் பெரும் ஆர்வம் கொண்டுள்ளனர் எனவும் இதுவரையில் 8 சதவீதமாக இருந்த செயற்பாடு 23 சதவீதமாக அதிகரித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் புத்தகங்களை சேதப்படுத்தாது பயன்படுத்தும் மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும் புத்தகங்கள் இணையத் தளங்களிலும் சேர்க்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ)

# மகளிர் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் நிலையம்

(யாழ்ப்பாணம்)

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் மகளிர் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் நிலையம் ஒன்று மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களின் சந்தை வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் பொருட்டும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றும் நோக்குடனும் இந்நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்நிலையமூடாக தங்கள் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த விரும்பும் ஆர்வமுள்ள மகளிர் 021 222 6700, 077 2242394 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா அறிவித்துள்ளார். (ஶ்ரீ)

# சத்திய தரிசனம்

4



## பாமினி

தன் அன்னையின் மடியில் அவள் வந்துதித்த பொழுதில் இவ்வுலகில் பெரும் அதிசயங்கள் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. அவள் வரவு பற்றியதான எதிர்வு கூறல்கள் எதனையும் தேவதூதர்கள் வானில் தோன்றி அறிவிக்கவும் இல்லை. நல்லதோர் குடும்பத்தில் ஒரு நற்குண பெற்றோருக்கு மூன்றாவது பெண்மகளாக வந்து பிறந்தாள் பாமினி.

“புத்தம் புதுமலரே குறுநகை புரியும் வெண்ணிலவே” அவள் வரவில் மகிழ்ந்து அன்னையவள் அவளுக்காய் பாடிய தாலாட்டு இது. பாமினி வளர வளர அவளது அன்னையின் தாலாட்டின் வடிவங்களும் மாறுபட்டன. தேவாரமாக, திருவாசகமாக, கிறிஸ்தவ கீதங்களாக, நாட்டுப்பாடல்களாக பலவழிகளிலும் அவளுடன் இசையாமல் மொழி பேசினாள் அவள் அன்னை.

பாமினி குழந்தைப் பருவத்தைக் கடந்தாள். அப்போது அம்மாவின் இசையுடன் கதையும் வந்து இணைந்து கொண்டது. க்தைகள் மூலம் நல்லுணர்வுகளையும் உணவுடன் சேர்த்து ஊட்டினாள் அம்மா. புராண இதிகாசங்கள்– மகான்களின் வாழ்க்கை வரலாறுகள் எல்லாம் அவளுக்கு பாடங்ளாகப் போதிக்கப்பட்டன. உப கதைகள்– உலக நீதிக்கதைகள் பல அவளுக்கு உபதேசங்கள் ஆகின. பழங்கதைகள்–பஞ்சதந்திரக் கதைகள் என்பன அவளது நெஞ்சிலே பதியப்பட்டன.

நிழல்போல் எந்நேரமும் தன்னையே சுற்றிவந்த தன் பிரதிப் பெண் குழந்தைக்கு அவள் அன்னையால் அன்புடன் உவந்தளிக்கப்பட்ட நற்பிரசாதங்கள் அவையாகும். அதன் காரணமாய் மொட்டாக இருந்த அவளது அறிவுத் தாமரையானது அழகாக மலர்ந்து மணம்வீசியது. அவள் வளர்ந்தாள்.

பாமினி தன் கையில் கிடைக்கும் நல்ல புத்தகங்கள் எதனையும் விட்டு வைக்கமாட்டாள். அத்தனையையும் வாசித்து விடுவாள். புதினத்தாள்களையும் வாசிப்பாள். நல்ல வானொலி நிகழ்ச்சிகள், செய்திகள் என்பவற்றையும் தவறாமல் கேட்பாள். அதனால் நாளுக்குநாள் அவளது பொது அறிவு வளர்ச்சிபெற்று வருகிறது.

பாடசாலையிலும் பாமினி தன் ஆசிரியர்களுக்கு கீழ்படிவுள்ள நல்ல மாணவியாக இருக்கிறாள். சக மாணவிகளுடன் வீண்வார்த்தைகள் எதனையும் பேசி அவள் நேரத்தை வீணடிப்பதில்லை. மிகவும் புத்திசாதுரியமாக பாடங்களை கற்பாள். அதனால் வகுப்பில் முதல் மாணவி அவள்தான்.

பாடசாலையின் விளையாட்டு நிகழ்வுகள் அனைத்திலும் அவள் தவறாமல் பங்குபற்றுவாள். அவளது அறிவுத்தாகத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் உறுதுணையாக இருப்பது அவளின் பள்ளிக் கல்விதான்.

**சந்திரா தனபாலசிங்கம்**

(தொடரும்)

# ஓய்வுநிலை யாழ்ப்பாண வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களின் மணிவிழாக் காட்சிகள்



மணிவிழாத் தம்பதிகள் அழைத்துவரப்படுகின்றனர்.





விழா மண்டபத்தை நோக்கி...






மங்கல விளக்கேற்றல்



வரவேற்பு நடனம்



அரங்கில் விருந்தினர்கள்





அரங்கில் விருந்தினர்கள்







தலைமையுரை மற்றும் வாழ்த்துரைகள்



வாழ்த்துரை





மணிவிழா நாயகிக்கு கௌரவிப்பு





மண்டபம் நிறைந்த கல்விச் சமூகம்

# வடமராட்சி கிழக்கு...

கடந்த காலங்களில் இவர்களின் வாழ்விடங்கள் சிறப்பின்மையால் சமூக பொருளாதார ரீதியில் முன் னேற முடியவில்லை. மணற்காட்டு மக்கள் குடத்தனை நலன்புரி நிலையத்தில் பலவருடங்கள் சொல்லென்னா துயரத்துடன் வாழ வேண்டியதாயிற்று. இன்று இவர்கள் சிறந்த வீடமைப்பு திட்டத்தில் வாழ்வது இவர்களது வாழ்வு சிறக்க வழி வகுக்கப்படலாம். நாகர் கோவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் கற்கோவளம் புனித நகரிலும் பொற்பதியிலும் புதிய, தரமான வீடமைப்பு திட்டங்களிலும் வாழ்கின்றனர். வடமராட்சிகிழக்கின் வடக் குப் பகுதியில் பல்வேறு வீடமைப்புத் திட்டங்க ளினால் ஏழை மக்கள் பெரும் நன்மை பெற்றிருக்கின்றனர். இது இவர்களது சமூக பொருளாதார மேற் கிளம்புகைக்கு வழி சமைக்கும் என்பது திண்ணம்.

அண்மையில் மீள் குடியமர்த்தப்பட்ட செம்பியன்பற்று மற்றும் ஏனைய பிரிவுகளில் சுனாமி வீட்டுத் திட்டங்கள் அமைப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்த போதும் யுத்தத்தின் காரணமாக இவை நிறைவேற்றப்படவில்லை. இருந்த வீடுகளும் சுனாமியாலும் யுத்தத்தாலும் இடப்பெயர்வாலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதனால் இப்பகுதி மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு வீடமைப்புத் திட்டங்களுக்கும் வீடு மேம்படுத் தல் திட்டங்களுக்கும் முன்னுரிமை அளிக்கப் பட வேண்டும். வீடமைப்பு திட்டங்கள் வெற்றி பெறுமாயின் ஒட்டு மொத்தமான வாழ்வை மேம்படுத்தும் என்பது கருத்தாகும். வீடே மோட்சம் என்பது எம்மவர் கருத்து.

கல்வியில் இப்பிரிவு பல இடர்பாடுகளை எதிர் நோக்கியுள்ளது. இப்பிரிவில் கல்வி வளர்ச்சிக்கு பல செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அம்பன் மகாவித்தியாலயம் இன்று கல்வியில் சிறப்புடன் இயங்குவதுடன் இங்கிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள னர். இது போல் உடுத்துறை மகாவித்தியா லயம், நாகர் கோவில் மகாவித்தியாலயம் முன்னுரிமை அடிப்படையில் விருத்தியாக் கப்பட வேண்டும். இப்பிரிவு மக்கள் தாங்கள் கல்வியில் பின் நிற்கின்றோம் என்ற நீண்ட கால குறைபாட்டை நிவர்த்திக்க வேண்டும்.

மணற்காடு, நாகர் கோவில் பகுதிகளில் நல்ல தரை கீழ் நீர் வளம் உள்ளதாக ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இவ்வ ளத்தை அடிப்படையாக வைத்து இப்பகு திக்கு நீர் விநியோகத்திட்டம் அமுல்படுத்த வேண்டும். முன்னர் இவ்வளத்தை அடிப்ப டையாகக் கொண்டு சந்தை நகர்கள், நீர் விநியோ கத் திட்டம் ஒன்று முன்மொழியப்பட்டு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அலன் தம்பதிகள்கடத்தப்பட்ட நிலையில் இத்திட்டம் கைவிடப்பட்டது நாம் அறிந்ததே.

ஆணையிறவு கிழக்குப் பகுதி கடல் நீர் ஏரி- தற்பொழுது நன்னீர் ஏரியாக மாற்றமடைந்து வருவதுடன் அது கோடை காலங்களில் வற்றி விடுகின்றது. கனகராயன் ஆறும் ஏனைய அருவிகளும் நீர் ஏரிக்கு நீரை கொண்டு வந்து சேர்க்கின்றன. இந் நீர் ஏரியில் இருந்து வடமராட்சி கடல் நீர் ஏரிக்கு மண்டலாய் கால்வாய் மூலம் நீர் கொண்டு செல்லப்பட்டது. தற்பொழுது இக் கால்வாயானது ஆணையிறவு கடல் நீர் ஏரியில் இருந்து நீரை திருப்புவதற்கு நல்ல நிலையில் இல்லை. இக்கால்வாய் மீண்டும் சீரமைக்கப்படின் வடமராட்சி கடல் நீர் ஏரி அடுத்துள்ள பகுதிகள் உவர்த்தன்மை குறைப்பதற்கும் நிலம் மீட்பதற்கும் உதவி யாய் இருக்கும். இதன் மூலம் வடமராட்சி கடல் நீர் ஏரியை சுற்றியுள்ள 10 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வெவ்வேறு நல்ல பயன்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும். ஏற்கனவே தொண்டைமானாறு தடுப்பனை வேலை முடிவு பெற்றிருப்பதால் மண்டலாய் கால்வாயின் சீரமைப்பு இன்று தேவையான ஒன்றாகும்.

இப்பிரதேசம் நல்ல மணல் கடற் கரையைக் கொண்டும் இது கிழக்கில் அமைந்திருப்பதால் மாலையில் முகவெய்யில் இல்லாமல் இருப்பதும் இயற்கைக் காட்சி யையும் சுற்றுச் சூழல் சிறப்பிடங்களை கொண்டிருப்பதால் சுற்றுலா தொழில் விருத் திக்கு ஏற்ற இடமாக உண்டு. இப்பகுதியில் மணற்காடு- நாகர்கோவில் மணல்மேடு கள், கிழக்கு மணல் கடற்கரை, மேற்கு கரை சதுப்பு நிலங்கள், கண்ணாக்காடுகள், சிறு மீன்பிடிக்குடில்களில் கவர்ச்சிகரமான கரை வலையிழுக்கும் செயற்பாடுகள் போன்றன சுற்றுலாத் துறை வளர்ச்சிக்கு ஏற்றதாக உள்ளது.

இப்பிரதேசத்தின் வீதிப் போக்குவரத்து மேம்படும் இடத்து இது அபிவிருத்தியை துரிதப்படுத்தும். இதற்கு பின்வரும் வீதிகள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

1. பருத்தித்துறை- செம்பியன் பற்று- சுண்டிக்குளம்
2. நாகர்கோவில்- எழுது மட்டுவாள்
3. குடத்தனை - வரணி
4. இயக்கச்சி- மண்டலாய் - கோயில் வயல்- சுண்டிக்குளம்
5. புதுக்காட்டுச்சந்தி- செம்பியன்பற்று

வடமராட்சி கிழக்கு யாழ்ப்பாணம்- கண்டி வீதிக்கு அருகாமையில் இருப்பினும் வீதிப் வலைப்பின்னல் தொடர்பு குறைவாக இருப்பதனால் யாழ்ப்பாணம்- கண்டி வீதியின் பயனை இப்பிரதேசம் பெற முடியாதுள்ளது. இதனால் இப் பெருவீதிக்கும் வடமராட்சி கிழக்குக்கும் கடல் நீர் ஏரியூடாக பல வீதிகள் அமைக்கப்பட வேண்டும்.

வடமராட்சி கிழக்கின் வளர்ச்சிக்கு செம்பியன் பற்றில் ஒரு சிறு நகரம் விருத்தி செய்யப்பட வேண்டும். இச்சிறு நகரம் இப்பிரிவின் அரச, வர்த்தக வங்கி மற்றும் சேவை மையங்களை கொண்டிருக்க வேண்டும். இந்நகரின் வளர்ச்சி மூலம் இப்பிரிவின் கல்வி, சுகாதார வளர்ச்சிகளை இலகுவாக முன்னெடுக்க முடியும். தற்பொழுது இப்பிரிவில் எரிபொருள் நிலையமோ அல்லது வர்த்தக வங்கியின் செயற்பாடுகள் இன்மை வளர்ச்சியை பெரிதும் பாதித்துள்ளது.

வடமராட்சி கிழக்கிற்கு தனியான ஒரு பிரதேசசபை உருவாக்கப்படின் இப்பிரிவு மக்களின் பல்வேறு அடிப்படை தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்ய முடியும்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமிடத்து மீள்குடியேறியிருக்கும் மக்களின் இயல்பு வாழ்க்கை மேம்படுவதுடன் அபிவிருத்தியை துரிதப்படுத்தலாம். இதற்கு மக்களை சிறந்த முறையில் அணிதிரட்டி அவர்களை அபிவிருத்தியின் பங்காளியாக்கிகள நிலைக்கு மிகப் பொருத்தமான திட்டங்களை முன்னெடுப்பின் குறுகிய காலத்தில் இப்பிரிவு மேம்பாடடைவதற்கும் கால மெடுக்காது. இப்பிரதேசத்தின் மணல் வளம் குறித்து அதனுடன் இணைவான சுற்றுச் சூழல் உள்ளூர் மக்களின் நலன் சார்ந்த விடயங்கள் பற்றி தனியாக ஆராயப்படும்.

(தொடரும்)

# மீண்டும் முத்தரப்புத் தொடர்

(மெல்பேர்ன்)

அவுஸ்திரேலியாவில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் கைவிடப்பட்ட முத்தரப்பு கிரிக்கெட் தொடர் மீண்டும் நடத்தப்படுகிறது. இதில் இந்தியா- இலங்கை அணிகளும் பங்கேற்கின்றன.

அவுஸ்திரேலியாவில் கடந்த 1978ஆம் ஆண்டு முதல் மூன்று நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வந்தது. 29 ஆண்டுகளாக நடந்த இத் தொடருக்கு வர்த்தக ரீதியில் வரவேற்பு இல்லாததால், கடந்த 2007ஆம் ஆண்டுக்குப் பின் நடத்தப்படவில்லை. தற்போது மீண்டும் இப் போட்டிகளை நடத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை முன்வந்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் முதல் 2012 மார்ச் வரை இந்திய அணி அவுஸ்திரேலியா செல்கிறது. அப்போது நான்கு டெஸ்ட், இரண்டு இருபது - 20 தொடருடன் முத்தரப்பு ஒருநாள் தொடரிலும் பங்கேற்க முடிவு செய்துள்ளது. இதில் மூன்றாவது அணியாக இலங்கை கலந்துகொள்கிறது.

இத் தொடர் 2012 பெப்ரவரி 05ஆம் திகதி முதல் மார்ச் 8 வரைக்கும் நடக்கும். ஒவ்வொரு அணியும் மற்ற இரண்டு அணிகளுடன் தலா 4 லீக் போட்டிகளில் மோத வேண்டும். முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் மூன்று போட்டிகள் கொண்ட (மார்ச் 4, 6, மற்றும் 8) மோதும். இதில் இரண்டு போட்டியில் வெல்லும் அணி இறுதிப் போட்டியில் சம்பியனாகும்.

# தவித்தார் செரீனா மீட்டார் வீனஸ்



டென்னிஸ் உலகின் புகழ்பெற்றவர்கள் அமெரிக்காவின் வீனஸ்- செரீனா வில்லியம்ஸ் சகோதரிகள். செரீனா ஒரு தொடரில் பங்கேற்றார் என்றால் அவரை எதிர்த்து ஆடும் எல்லா வீராங்கனைகளுக்குமே வயிற்றில் புளியைக் கரைத்தது மாதிரித்தான் இருக்கும்.

ஏனெனில் செரீனாவை வீழ்த்துவது அவ்வளவு எளிதல்ல. எவ்வளவு நேரமானாலும் களைப்பே இல்லாமல் களத்தில் அசராமல் ஆடக்கூடியவர். அப்படியிருக்கையில், கடந்த ஓராண்டு காலமாக செரீனா எந்தவித ஆட்டங்களிலும் பங்கேற்கவில்லை. இதற்கு அவர் காயமடைந்துள்ளார் என காரணம் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் செரீனாவுக்கு நுரையீரலில் இரத்தம் உறைந்து கட்டியாக மாறியதால் தான் போட்டிகளில் பங்கேற்கவில்லை என்பது தெரியவந்துள்ளது.

கடந்த பல மாதங்களுக்கு முன்பு ஜிம்மில் உடல் பயிற்சி செய்துகொண்டிருந்தபோது தான் இந்தப் பிரச்சினை இருப்பது தெரிய வந்தது. இதற்கான அறிகுறிகள் தெரிந்ததுமே அவரது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் நிச்சயமாக இது நுரையீரல் பிரச்சினைதான் என ஆணித்தரமாகக் கூறி அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்ள வைத்துள்ளார்.

தற்போது முற்றிலும் குணமடைந்துள்ள செரீனா மீண்டும் களத்தில் இறங்கிவிட்டார். நேற்று முன்தினம் சர்வதேச போட்டியில் ஆடினார்.

இங்கிலாந்தின் ஈஸ்ட் பிரவுன் நகரில் நடந்துவரும் போட்டியில் செரீனா 1-6, 6-3, 6-4, என்ற செட் கணக்கில் சற்றுப் போராடி பல்கேரியாவின் ஸ்வெட்னா பைரோன்கோவாவை வீழ்த்தினார்.

முன்னதாக தொடரில் பங்கேற்ற வீராங்கனைகள் செரீனாவுக்கு சிறப்பான வரவேற்பளித்தனர்.

## வட மாகாண விளையாட்டுப் போட்டி

# மரதன் ஓட்டப் போட்டியில் நெலுக்குளம் மாணவன் முதலிடம்

## பெண்கள் பிரிவில் கிளி. மாணவி





(யாழ்ப்பாணம்)

வட மாகாண பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவு. நெலுக்குளம் கலைமகள் வித்தியாலய மாணவன் என்.சாந்தரூபனும் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி பாரதி வித்தியாலய மாணவி பி.விமலாதேவியும் முதலாமிடத்தைப் பிடித்தனர்.

2011 ஆம் ஆண்டிற்கான வடக்கு மாகாண பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகள் கடந்த 12ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படுகிறது.

இதில் கடந்த 12ஆம் திகதி யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலிருந்து நெல்லியடி வரை நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் 05 மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மட்ட வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

இதில் ஆண்கள் பிரிவில் வவுனியா நெலுக்குளம் கலைமகள் வித்தியாலய மர்ணவன் என். சாந்தரூபன் முதலிடத்தையும், முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க.பா. மாணவன் ரி. தேவராஜன் இரண்டாமிடத்தையும், கிளிநொச்சி இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா. மாணவன் ஆர். பிரசாந்தன் மூன்றாமிடத்தையும் பிடித்தனர்.

அத்துடன் கே.சாந்தன் (வவு.சுந்தரபுரம் அ.த.க.பா.), ஜே.ஜே.டிலோயன் (கிளி.இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பா.), கே.சுதர்சன் (மன்னார் சித்திவிநாயகர் இந். கல்லூரி), வி. பிரவிந்தன் (வவு.புதுக்குளம் மகா வித்தி), கே.தர்சன் (வவு.செட்டிக்குளம் மகா. வித்தி), எஸ்.செபஸ்ரியன் சில்வா (மன்னார் புனிதவளனார் றோ.க.த.க.பா.), ஜே.யோகராஜ் (தொண்டைமானாறு வீரகத்தி வித்தி ஆகியோர் முறையே முதல் 10 இடங்களைப் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் கிளிநொச்சி பாரதி வித்தியால மாணவி பி.விமலாதேவி முதலாமிடத்தையும், கிளிநொச்சி தர்மபுரம் மகா வித்தி. மாணவி எஸ்.தீபா இரண்டாமிடத்தையும், வவுனியா ஸ்கந்தபுரம் அ.த.க.பா. மாணவி ஆர். சாளினி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

அத்துடன் ஜே.மரியரோரதி (எழுவைதீவு முருகவேள் வித்தி.), எம்.ஜெயந்தினி (கிளி. இராமநாதபுரம் அ.த.க.பா.), ஜே.வினோஜா (வவு. கல்மடு மகா வித்தி.), எஸ். மேரி சுஸ்மிதா டயஸ் (மன்னார் புனிதவளனார் றோ.க.த.க.பா.), ஏ.ரேணுகா (கச்சாய் றோ.க.த.க.பா.), ஏ.அனா (மன்னார் எழுதூர் றோ.க.த.க.பா), பி.ரேணுகா (வவு.ஓமந்தை மத்திய கல்லூரி) ஆகியோர் முதல் 10 இடங்களுக்குள் தெரிவானார்கள். (எ-5)

# துளித்துளியாய்...

### ரோஜா படுக்கையில்லை

அப்ரிடி திடீரென அணித் தலைவர் பதவியைத் துறந்ததால் பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணிக்கு தலைவராக இருந்து வரும் மிஸ்பா உல்ஹக் ஒரு நாள் போட்டிக்கும் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் மிஸ்பா கூறுகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் அணித்தலைவர் பதவி என்பது படுக்கை மீது ரோஜாக்கள் விரித்தது போல இருக்காது. நீண்டகால பதவி குறித்து எப்போதும் நான் சிந்தித்தது கிடையாது. என்னால் முடிந்தவரை சிறப்பாக செயல்படுவேன் என்றார்.

### இன்று கடைசி டெஸ்ட் ஆரம்பம்

இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வரும் இலங்கை அணி முதல் டெஸ்ட் தோல்வி அடைந்தது. 2-வது டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. இந்நிலையில் கடைசி டெஸ்ட் இன்று ரோஸ்பவுல் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இப்போட்டியில் காயம் காரணமாக அணித் தலைவர் டில்சான் பங்கேற்காததால் சங்கக்கார தலைமையில் இலங்கை அணி களமிறங்குகிறது.







ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற ஜொலிஸ்டார் விளையாட்டுக்கழக அணித் தலைவரிடம் பிரதம விருந்தினரின் பாரியார் கிருபாகரி இளங்கோவன் கேடயம் வழங்குவதையும், விருந்தினர்களையும், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் உரையாற்றுவதைப்ம் படங்களில் காணலாம். படங்கள்: என் .குமார்

# 'இலங்கையின் கொலைக்களம்'...

பிரித்தானியாவின் சனல் 4 தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட இலங்கையின் கொலைக்களம் எனும் ஆவணப் படத்தில், வன்னியில் பொது மக்கள் செறிவாக வாழ்ந்த இடங்களிலும், வைத்தியசாலைகளிலும் படைத்தரப்பினர் ஷெல் தாக்குதலை மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள் என பலரும் இதன்போது காயமடைந்து இரத்தம் தோய்ந்து கதறி அழுவதை இந்த ஆவணப்படத்தில்காண முடிகின்றது.

விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் உயிரிழந்த நிலையில் நிர்வாணமாக டிரக் வண்டிகளில் ஏற்றப்படுவதோடு, நிர்வாணமாகக் காணப்படுபவர்களை நோக்கி படைத்தரப்பினரால் கூறப்படும் தகாத வார்த்தைகளையும் இந்த ஆவணப் படத்தில் சனல் 4 தொலைக்காட்சி தகுந்த சான்றுகளுடன் வெளிப்படுத்தியுள்ளது.

படைத்தரப்பினரால் விடுதலைப் புலிகளின் ஆண் போராளிகள் சுட்டுக்கொல்லப்படும் வீடியோக்களை முன்னர் ஒளிபரப்பிய சனல் 4 தொலைக்காட்சி, தற்போது பெண் போராளிகளும் கண்கள் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் இவ்வாறு சுட்டுக்கொல்லப்படும் காட்சிகளையும் ஒளிபரப்பியுள்ளது.

இராணுவம் சட்டத்திற்கு புறம்பான முறையில் தமிழ் மக்களைப் படுகொலை செய்தமைக்கான ஆதாரங்களை கொண்ட இதற்கு முன் வெளிவராத காட்சிகளை சனல் 4 வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோ பொய்யானது என அரசு நிராகரித்துள்ளதுடன் இது இராணுவத்தின் மீது களங்கத்தை உண்டுபண்ணும் நோக்கம் கொண்டது என தெரிவித்துள்ளது.

ஒரு இலட்சம் மக்கள் வரை கொல்லப்பட்ட இந்த யுத்தத்தில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பல்வேறு மனிதவுரிமை மீறல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன.

சனல் 4 வெளியிட்ட இந்த ஒரு மணிநேர வீடியோவில், தமிழர்கள் கொல்லப்படும் காட்சிகளும் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பெண் போராளிகளின் நிர்வாணமான உடல்களும் பதிவாகியுள்ளன.

கடந்த இரு ஆண்டுகளாகத் திரட்டப்பட்ட வீடியோப் பதிவுகளையும் சாட்சியங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த ஆவணப்படம் போரின் இறுதிக்கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்களைப் பதிவாக்கியுள்ளது.

ஒரு காணொளியில் கைது செய்யப்பட்ட ஒரு பெண் போராளி உட்பட மூன்று பேரை இராணுவம் அருகாமையில் வைத்து சுட்டுக் கொல்லும் காட்சிகள் பதிவாகியுள்ளன. இவர்களை தலையில் சுட்டு கொல்லுமாறு இராணுவத்தினர் உத்தரவிடும் காட்சியும் பதிவாகியுள்ளது.

இவ்வீடியோவில் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட இடங்களில் அமைந்திருந்த தற்காலிக வைத்தியசாலைகள் மீது இராணுவம் மேற்கொண்ட திட்டமிட்ட தாக்குதல் குறித்த சாட்சியங்களும் உள்ளன.

போரில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவில்லை எனக் கூறிவரும் இலங்கை அரசு இக் குற்றச்சாட்டுகளை வழமைபோல மறுத்துள்ளது.

இந்த வீடியோ காட்சிகள் திரிபுபடுத்தப்பட்டவை என பெயர் குறிப்பிடாத ஒரு நிபுணர் தெரிவித்ததாக பாதுகாப்பு அமைச்சு தனது இணையத் தளத்தில் தெரிவித்துள்ளது.

பல ஆயிரம் மக்களைப் பலிவாங்கிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த தம்மை நியாயத்திற்கு புறம்பாக விமர்சிப்பதாக அரசு தெரிவித்துள்ளது. (எ-5)

# தற்போதைய பேச்சுவார்த்...

சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய அதிகாரப் பகிர்வு ஒன்றையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நாட்டின் தற்போதைய அமைதிச் சூழ்நிலை அதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் இலங்கை மக்களுக்கும் நாட்டுக்கும் பயன்தரக் கூடிய வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில், காணி, பொலிஸ் அதிகாரங்களை யார் கொண்டுள்ளார்கள்? என இச்சந்திப்பின் முடிவில் கேட்டதாகவும் இந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் இதுவரை ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் இதனால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதே உண்மை. இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு தற்போது நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது. அரசாங்கம் அதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கொண்டிருந்த தொடர்புகள் குறித்து பலரும் விமர்சிக்கின்ற போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றும் வடக்குக் கிழக்கில் செல்வாக்குமிக்க கட்சியாகவே இருந்து வருகிறது எனத் தெரிவித்திருக்கும் இந்துஸ்தான் ரைம்ஸ் தமிழ் மக்களின் அரசியலில் சம்பந்தன் பிரதான பாத்திரம் வகிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் பற்றி அவதானத்துடனேயே அவர் கருத்துகளை வெளியிட்டார். இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாகவும் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை சென்று பார்வையிட முடியாமல் இருப்பது குறித்தும் அவர் தனது கவலைகளை வெளியிட்டார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் பொலிஸ், காணி அதிகாரங்களுடன் கூடிய அதிகாரப் பகிர்வு ஒன்றையே நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தொடர்ந்து ஆட்சிக்குவந்த இலங்கை அரசாங்கங்கள் காணி அதிகாரம், பிராந்தியங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க தயங்குவது போன்றன இந்தப் பேச்சுவார்த்தையின் முக்கிய விவகாரமாகவுள்ளது. இந்த விவகாரமே இந்த தடவையும் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை குழப்பி விடலாம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் முன்னரும் பல தடவைகள் நடத்தியிருந்தது. ஆனால் தற்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தைகள் இறுதியானதாக அமைய வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகவும் வேண்டுதலாகவும் உள்ளது என சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (எ-5)

# சம்பிக்க ரணவக்க...

ஜனாதிபதி நாடாளுமன்றத்திற்கு சென்றிருந்த போது இந்த அமைச்சர்கள் இருவரும் நாடாளுமன்றத்திலுள்ள ஜனாதிபதியின் அலுவலகத்திற்குச் சென்று சிலமணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதுடன் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தீர்மானங்களை எடுத்தால் ஜனாதிபதியுடன் கைகோர்த்துள்ள தேசப்பற்றுள்ள சக்திகள் விலகிச் செல்லக் கூடும் எனவும் ஜனாதிபதி தனிமைப்படுத்தப்படலாம் எனவும் கூறியுள்ளனர்.

இந்தியாவும் மேற்குலக நாடுகளும் அரசாங்கத்தை கவிழ்க்க சூழ்ச்சி செய்து வரும் நிலையில் அவர்களின் நிலைப்பாடுகளின் கீழ் செயற்படுவதானது தனிப்பட்ட ரீதியில் தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பானது என கூறியுள்ள அமைச்சர்கள் எவ்வாறான வெளிநாட்டு அழுத்தங்கள் வந்தபோதிலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுத்தது போன்று இந்த சந்தர்ப்பத்திலும் தீர்க்கமான முடிவுகளை எடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளனர். (எ-5)

# புலி ஆதரவாளர்களின்...

யுத்தத்தில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர்களின் குடும்பங்கள் இன்றும் அரசாங்கத்தின் பாதுகாப்பில் நலமுடன் வாழ்ந்து வருகின்றார்கள். கடற்புலிகளின் தலைவர் சூசையின் மனைவி, பிள்ளைகள், புலிகளின் அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வனின் குடும்பம் உள்ளிட்ட 11 ஆயிரம் முன்னாள் போராளிகள் பாதுகாக்கப்பட்டமை அதற்கு சிறந்த உதாரணமாகும்.

அத்துடன் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் பெற்றோர் மரணிக்கும் வரையில் அவர்களை இராணுவமும், அரசாங்கமுமே பாதுகாத்து வந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள வீடியோ ஆவணத்தை முற்றாக நிராகரிப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சனல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய இலங்கையின் கொலைக்களம் எனத் தலைப்பிடப்பட்ட ஆவணப்படத்தை இலங்கை அரசாங்கம் பரிசோதிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆவணப்படத்தை நாம் மிக கவனமாக பரிசோதிப்போம். இதற்கு எமது சொந்த தடவியல் நிபுணர்களும் வெளிநாட்டு நிபுணர்களும் உள்ளனர். அதை பரிசோதித்த பின்னர் நாம் பதிலளிப்போம் என அரசாங்கப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார்.

அரசாங்கம் இதற்கு எப்படியான பதிலை அளிக்கும் என இப்போது கூறுவது காலத்திற்கு முந்திய செயற்பாடாக அமையும். 2009 ஆம் ஆண்டிலும் சனல் 4 அலைவரிசை இவ்வாறான வீடியோவொன்றை ஒளிபரப்பியது. அது போலியானது என நிரூபிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இந்த வீடியோ போலியானது என தான் ஏற்கனவே நிரூபித்துள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடகமத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல கூறினார்.

அத்துடன் இந்த ஆவணப்படத்தை உள்ளூர் மக்கள் பார்த்தாலும் அது இராணுவத்தின் மனவுறுதியையோ மதிப்பையோ பாதிக்காது. ஏனெனில் அந்தப்படம் போலியானது என முடிவு செய்யப்பட்டதொன்றாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியாக நிச்சயமாக அது இலங்கை மீதான தவறான பாதையை ஏற்படுத்தும். ஆனாலும் இலங்கைப் படைகள் உலகின் மிக ஒழுக்கமான படைகளில் ஒன்றென சர்வதேச ரீதியான அங்கீகரிக்கப்பட்டுள்ளது என லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார். (எ-5)

# விசாரணைக்கு வலி...

மான விசாரணைகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் சுயாதீனமான சர்வதேச விசாரணைகள் அவசியம் என்ற தீர்மானத்தை கோரும் மனுவொன்று பிரித்தானிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இப் போரின் போது சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மீறி இலங்கை படைத்தரப்பு மேற்கொண்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணை பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட வேண்டும் எனத் தெரிவித்து பிரித்தானியாவின் கொன்சவேட்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லீ ஸ்கொட்டும், தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சியோ பைன்மைக்டொனாவும் இணைந்து மனுவொன்றை அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

இம் மனு தொடர்பான விவாதம் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இதுவரை நடைபெறாத போதிலும் இலங்கையின் கொலைக்களம் என்ற சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படத்தை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பார்வையிடவேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். (ச-5)

# அதிர்ச்சியில்...

சர்வதேச சமூகத்துடன் இணைந்து பிரித்தானிய அரசு சகல வழிகளிலும் முயற்சியை மேற்கொள்ள தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

# விடுவிக்கப்பட்ட...

இது இவ்வாறு இருக்க, கடந்த டிசம்பர் மாதம் முதல் மனிகோய் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஆறு மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் இன்று இலங்கையினைவந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-5)


புதிய பிரிவு

~~55000/=~~ 20000/=
19/06/2011 வரை Per Year

A/L → Pass / Fail → BIT

University of Colombo

IT DEGREE



BIT மாணவர்களுக்கு மேலதிக கற்கைநெறிக்கட்டணம் இன்றி
BCS, Com-Engineer(USA), ICDL, Oracle JAVA, IELTS / TOEFL

MCS
Supported By UNDP/JRRP

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
324, Palaly Road, Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

தேவை

55 வயதிற்கு மேற்பட்ட வான் (Van) சாரதி தேவை.

வேலை இடம்: யாழ்.நகர்

தொடர்பு :-
0770366123

(5208)

யாழ் நகரில் மிக குறைந்த கட்டணத்தில் இந்தியாவுக்கு
விமானப்பயணச்சீட்டுக்கள் தங்குமிடவசதிகள்
பயணஒழுங்கமைப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
16875/= +Tax
4DAY 3NIGHT
பதிவுகளுக்கு முந்துங்கள்
Nation Popular Travels & Tours
இல : 82,பிறவுன் வீதி யாழ்ப்பாணம்
வீட்டிலிருந்து அழையுங்கள் வாகன ஒழுங்கமைப்பகளுக்கு மிகக்குறைந்த கட்டணத்தில் 550/= 1 மணித்தியாலத்திற்கு
Hotline: 0214920920 www.nationtravels.com இணையத்தளம் ஊடாகவும், தொலைபேசி ஊடாகவும் ஆசனங்களை முற்பதிவு செய்யலாம்.

MyWay ன் ஆங்கிலப்
பயிற்சி நெறியில் இணைய
25.06.2011 (சனிக்கிழமை) கடைசி நாள்.
MyWay English
182, Stanley Rd, Jaffna.
Ph : 0773363456
(C-3495)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.